மலர்-3 இதழ்-51 அக்டோபர் 1-15 2018 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! மெயில் புக்

மாதமிருமுறை

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்




# ஒரே அவதாரம் எட்டு பெயர்கள்

# இராமாயணத்தில் வாழ்ந்துகாட்டிய நான்கு வேதங்கள்



உலகம் முழுவதும் பரவி பரிணமித்து காணப்பட்டது இந்து மதம், ஆரம்பகாலத்தில் இந்து மதத்திற்கு பெயர் இல்லாமல் உலகம் முழுவதும் ஒரே மதமாக இருந்து வந்தது.

காலப்போக்கில் இந்து மதத்தின் சில கருத்துக்களை மட்டும் எடுத்து இறை நிலையை அடைந்த ஒருசிலரால் அவர்கள் கடைபிடித்த வழிமுறைகளை தொகுத்து சிறு சிறு பிரிவாக மாறி, அந்தப் பிரிவை கடைபிடிக்கும் மக்கள் தங்களுக்கென ஒரு மதத்தின் பெயரை வைத்து வழிபாட்டை தொடர்ந்தனர்.

இவ்வாறு ஒருசில மதங்கள் தங்களுக்கென்று ஒரு பெயரை வைத்துக் கொண்ட காரணத்தால் அதுவரை பெயரிடப்படாமல் பொதுவாக இருந்த மதத்திற்கு ஒரு பெயர் தேவைப்பட்டதாலும், இந்தியாவை மையமாக வைத்து பொதுவாக செயல்பட்ட தாய்மதமாக விளங்கியதாலும், இந்து மதம் என்ற பெயரைத் தாங்கி, உலக மதங்களுக்கெல்லாம் தாய் மதமாக திகழ்ந்தது இந்து மதம்.

இந்தவகையில் இந்து மதத்தில் பல சிறப்புகள் உண்டு.

**நான்கு வேதங்கள்:**

ரிக்வேதம், சாம வேதம், யசுர் வேதம், அதர்வ வேதம்.

**நான்கு வேத பிரிவுகள்:**

சம்ஹிதைகள், பிராமணங்கள், ஆரண்யகங்கள், உபநிடதங்கள்.

**108 உபநிடதங்கள்:**

108 உபநிஷத்துக்களில் 10 முக்கிய உபநிஷத்துக்களான,

ஈசா வாஸ்ய உபநிடதம்,
கேன உபநிடதம்,
கடோபநிடதம்,
பிரச்ன உபநிடதம்,
முண்டக உபநிடதம்,
மாண்டூக்ய உபநிடதம்,
ஐதரேய உபநிடதம்,
தைத்திரீய உபநிடதம்,
பிரகதாரண்யக உபநிடதம்,
சாந்தோக்யம் உபநிடதம்,
மேலும்,

24 சாமானிய வேதாந்த உபநிடதங்கள், 20 யோக உபநிடதங்கள், 17 சன்னியாச உபநிடதங் கள், 14 வைணவ உபநிடதங்கள், 14 சைவ உபநிடதங்கள், 9 சாக்த உபநிடதங்கள்.

**ஆறு வேதாங்கங்கள்:**

சிக்ஷா, சந்தஸ், வியாகரணம், நிருக்தம், கல்பம், சோதிடம்.

**நான்கு உபவேதங்கள்:**

ஆயுர்வேதம், அர்த்தசாஸ்திரம், தனுர் வேதம், காந்தர்வ வேதம்.

**பதினெட்டு புராணங்கள்:**

பிரம்ம புராணங்கள்;

பிரம்ம புராணம், பிரம்மாண்ட புராணம், பிரம்ம வைவர்த்த புராணம், மார்க்கண்டேய புராணம், பவிசிய புராணம்.

**வைணவ புராணங்கள்;**

விஷ்ணு புராணம், பாகவத புராணம், நாரத புராணம், கருட புராணம், பத்ம புராணம், வராக புராணம், வாமன புராணம், கூர்ம புராணம், மச்ச புராணம், கல்கி புராணம்.

**சிவ புராணங்கள்;**

சிவமகாபுராணம், லிங்க புராணம், கந்த



புராணம், ஆக்கினேய புராணம், வாயு புராணம்

**பதினெட்டு உபபுராணங்கள்:**

சூரிய புராணம், கணேச புராணம், காளிகா புராணம், கல்கி புராணம், சனத்குமார புராணம், நரசிங்க புராணம், துர்வாச புராணம், வசிட்ட புராணம், பார்க்கவ புராணம், கபில புராணம், பராசர புராணம், சாம்ப புராணம், நந்தி புராணம், பிருகத்தர்ம புராணம், பரான புராணம், பசுபதி புராணம், மானவ புராணம், முத்கலா புராணம்.

**இரண்டு இதிகாசங்கள்:**

இராமாயணம்
மகாபாரதம்

**ஏனைய நூல்கள்:**

பகவத் கீதை,
உத்தவ கீதை,
ரிபு கீதை,
அஷ்டாவக்கிர கீதை,
பிரம்ம சூத்திரம், மனுஸ்மிருதி,
அர்த்தசாஸ்திரம், ஆகமம், தந்திரம், சூத்திரம், தோத்திரம், தர்மசாத்திரங்கள், நாலாயிர திவ்வியப் பிரபந்தம், தேவாரம், திருவாசகம், பெரிய புராணம்.....

இவ்வளவு அம்சங்களைக் கொண்டதே இந்துமதம். இந்தவகையில் மேற்கண்ட அனைத்தும் ஒன்றை ஒன்று பின்னிப் பிணைந்து மக்களின் வாழ்க்கைக்கு பற்பல வழிமுறைகளை சொல்லித்தருகிறது.

இதில் வேதத்திற்கும் இதிகாசமும் மிகவும் நெருங்கிய வகையில் பல தொடர்புகள் உள்ளன.

இந்தியாவில் உள்ள இதிகாசங்களில் மிகவும் உயர்ந்ததாக கருதப்படுவதில் இராமாயணமும் ஒன்று, இந்த இதிகாசம் மகாவிஷ்ணுவின் அவதாரங்களில் ஒரு அவதாரமாக ஸ்ரீராமன் அவதரித்தார் என்பதை கூறுவதுடன், மனிதர்களின் ஆசா பாசங்களால் ஏற்படும் விளைவுகளையும் மிக அழகாக எடுத்துக் கூறுகின்றனர்.

ஒருசாரார் இதை கதை என்று கூறினாலும், ஒருசிலர் இதை நடைபெற்ற உண்மைச் சம்பவம் என்று கூறினாலும், இராமாயணத்தில் கூறப்படும் தத்துவம் மனித வாழ்க்கை மேம்படுவதற்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த கருத்து உள்ளது என்பதை மறுக்கவும் முடியாது, மறக்கவும் முடியாது.



இதனால் இராமாயணத்தைப் பற்றிய வீணான வாத விவாதங்களில் நமது காலத்தை விரயமாக்குவதை விட்டுவிட்டு இராமாயணத்தில் உள்ள கருத்துக்களை நமது வாழ்க்கைக்கு பயன்படுத்தினாலே நமது வாழ்வு மேன்மையடையும்.

முக்கியமாக இராமாயணத்தில் வரும் நான்கு பேரிடம், நான்கு வேதத்தின் தத்துவம் உள்ளது, அவர்கள். இராமர், இலட்சுமணன், பரதன், சத்ருகன். இந்த நான்கு பேரும் தசரத மகாராஜாவின் மகன் களாவார்கள்.

தசரதன் ஒரு பிள்ளையை வேண்டி தவம் செய்தார். ஆனால், அவருக்கு நான்கு பிள்ளைகள் பிறந்தன.

அந்த நான்கு பிள்ளைகளும் காரணத்தோடு உருவானவை, தர்மம் நான்கு வகைப்படும்.

1.சாமான்ய தர்மம்.
2.சேஷ தர்மம்.
3.விசேஷ தர்மம்.
4.விசேஷதர தர்மம்

இந்த நான்கு தர்மத்தையும் பிரதிபலிப்பாக விளங்கிய நான்கு புதல்வர்கள் தசரத மகாராஜா பெற்றார். அந்த நால்வரின் குணாதிசயங்களும் நான்கு வேதங்களுடன் ஒத்துப்போனதால்தான் அந்த நால்வரையும் வேதத்திற்கு சமமானவர்கள் என்று நமது முன்னோர் சில திரிபு கதைகளின் மூலம் வெளிப்படுத்தினர்.

அந்த நான்கு தர்மத்தை பற்றி மேலோட்டமாக பார்ப்போம்.

### சாமான்ய தர்மம்: இராமர்

- பிள்ளைகள் பெற்றோரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?
- சீடன் குருவிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?
- கணவன் மனைவியிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?
- இத்தகைய சாமான்ய தர்மங்களைத் தானே பின்பற்றி எடுத்துக் காட்டினான் இராமர்.

### சேஷ தர்மம்: இலட்சுமணன்

- சாமானிய தர்மங்களை ஒழுங்காகச் செய்து கொண்டு வந்தால் கடைசியில் ஒரு நிலை வரும்.
- அந்த நிலையில் பகவானுடைய பாதங்களைத் தவிர வேறு ஒன்றும் சதம் அல்ல என்ற நினைப்பு ஏற்படும்.
- இத்தகைய தர்மத்துக்கு சேஷ தர்மம் என்று பெயர்.
- இதைப் பின்பற்றிக் காட்டினான் இலட்சுமணன்.

### விசேஷ தர்மம்: பரதன்

- தூரத்தில் இருந்து கொண்டே எப்போதும் பகவானின் சிந்தனையாகவே இருப்பது விசேஷ தர்மம்.
- இது சேஷ தர்மத்தைக் காட்டிலும் கடினமானது.
- இதைக் கடைபிடித்துக் காட்டியவன் பரதன்.

### விசேஷதர தர்மம்: சத்ருகன்

- பகவானை விட அவருடைய அடியார்களுக்குத் தொண்டு செய்வதே முக்கியம் எனக் கருதுவது விசேஷதரதர்மம்.
- சத்ருகன் பாகவத உத்தமனாகிய பரதனுக்குத் தொண்டு செய்தே கரையேறி விட்டான்.

ஆக, இந்த நான்கு தர்மங்களையும் இராமாவதாரத்தில் நான்கு புத்திரர்கள் மூலம் உலகுக்கு எடுத்துக் காட்டவே தசரதருக்கு நான்கு குழந்தைகள் பிறந்தன!

மற்றவர்களும் பயன்பெற
அறிமுகப் படுத்துங்கள்....

அற்புதமான கருத்துக்களைக் கொண்டு வெளிவரும் நமது இதழை உங்களுக்கு தெரிந்த நண்பர்கள், உறவினர்களும் படித்து பயன்பெற, அவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.
நமது இதழில் நிறை குறைகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

உங்கள் கருத்துக்களை கீழ்காணும் தொலைபேசி எண் மற்றும் இ-மெயில் முகவரியிலும் தெரியப்படுத்தலாம்
Cell: 08825844033
aanmeegamalar@gmail.com

## மேல் நோக்கு நாள், கீழ்நோக்கு நாள், சமநோக்கு நாள்

# பற்பலனை தரும் மூன்றுவித நாட்கள்

தினசரி நாள்காட்டியை நாம் பயன்படுத்தினாலும், அதில் உள்ள ஒருசில விஷயங்களை நாம் தெரிந்து கொள்ளாமலே இருக்கிறோம்.

இதுபோன்ற ஒருசில விஷயங்களை நாம் தெரியாமல் வைத்திருப்பதால் பல நல்ல பலன் தரும் விஷயங்களை இழந்து வருகிறோம்.

அந்த வகையில் தினசரி நாள்காட்டியில் உள்ள ஒரு விஷயம்தான் மேல் நோக்கு நாள், கீழ்நோக்கு நாள், சமநோக்கு நாள் (படத்தில் வட்டமிட்டு காட்டப்பட்டுள்ளது) போன்ற நாட்கள், இந்த நாட்கள் அனைத்து நாள்காட்டியிலும் இருக்கும். (ஒருசில நாட்காட்டியில் ⇧⇔⇩ இதுபோன்று குறியீட்டில் அமைந்திருக்கும்) ஆனால் நாம் அதை பொதுவாக மேல்நோக்கு என்றால் நல்ல நாள் என்றும், சமநோக்கு என்றால் சுமாரான நாள் எனவும், கீழ்நோக்கு நாள் என்றால் கெடுதலான நாளாகவும் எண்ணி அந்த நாட்களில் தவறான காரியங்களில் ஈடுபடுகிறோம்.

மேல்நோக்கு நாள், கீழ்நோக்கு நாள், சமநோக்கு நாள் இவை மூன்றும் அன்றைய தின நட்சத்திரத்தின் அடிப்படையில் அமைகின்றன.

நட்சத்திரங்கள் மொத்தம் 27 இவைகளை நம் முன்னோர்கள் ராசிமண்டல அடிப்படையில் மூன்றாக பிரித்தனர்.

1 ஊர்த்துவமுக நட்சத்திரம்
2 அதோமுக நட்சத்திரம்
3 த்ரியமுக நட்சத்திரம்

### ஊர்த்துவமுக நட்சத்திரம்

1. ரோகிணி,
2. திருவாதிரை,
3. பூசம்,
4. உத்திரம்,
5. உத்திராடம்,
6. திருவோணம்,
7. அவிட்டம்,
8. சதயம்,
9. உத்திரட்டாதி

ஆகிய ஒன்பது நட்சத்திரங்களும் ஊர்த்துவமுக நட்சத்திரங்கள் எனப்படுகின்றன.

இந்த நட்சத்திரங்களைக் கொண்ட நாட்களை மேல்நோக்கு நாட்கள் எனப்படும்.

இன்னாளில்...

மேல்நோக்கி வளர்கின்ற பயிர்களுக்காக விதை விதைத்தல், மரங்களை நடுவதற்கும், மேல்நோக்கி எழும் கட்டிடங்கள்(வீடு), உயரமான மதில் போன்றவற்றைக் கட்ட ஆரம்பிக்க உரிய நாட்கள் ஆகும்.

இரண்டாவதாக வரும் 9 நட்சத்திரங்கள் அதோமுக நட்சத்திரம் என்று அழைக்கப்படும். அந்த நட்சத்திரங்கள்.

### அதோமுக நட்சத்திரம்

1. பரணி,
2. கிருத்திகை,
3. ஆயில்யம்,
4. மகம்,
5. பூரம்,
6. விசாகம்,
7. மூலம்,
8. பூராடம்,
9. பூரட்டாதி

ஆகிய ஒன்பது நட்சத்திரங்களும் அதோமுக நட்சத்திரங்கள் எனப்படும்

அதாவது...

இந்த நட்சத்திரம் கொண்ட நாட்களை கீழ்நோக்கு நாள் எனப்படுகிறது.

இந்த நாட்களில்...

கிணறு வெட்டுதல், புதையல் தேடுதல், சுரங்கப் பணிகளை மேற்கொள்ளுதல், பூமிக்கடியில் வளரும் கிழங்கு வகைச் செடிகளைப் பயிரிடுதல் முதலான பணிகளைச் செய்வது நல்லது.

மூன்றாவது வரும் 9 நட்சத்திரங்கள் த்ரியமுக நட்சத்திரம் என்று அழைக்கப்படும். அந்த நட்சத்திரங்கள்:

### த்ரியமுக நட்சத்திரம்

1. அஸ்வினி,
2. மிருகசீரிஷம்,
3. புனர்பூசம்,
4. ஹஸ்தம்,
5. சித்திரை,
6. சுவாதி,
7. அனுஷம்,
8. கேட்டை,
9. ரேவதி

ஆகிய ஒன்பது நட்சத்திரங்களும் த்ரியக்முக நட்சத்திரங்கள் ஆகும்.

இந்த நட்சத்திரங்கள் கொண்ட நாட்களை சமநோக்கு நாட்கள் எனப்படும்

இந்த நாட்களில்...

வாகனங்கள், கார், பைக் வாங்குதல், செல்லப் பிராணிகள், ஆடு, மாடு, காளை வாங்குதல், சாலை அமைத்தல், வாசக்கால் வைத்தல், வயல் (ஏறு) உழுதல் ஆகிய பணிகளைச் செய்வது உத்தமம்.

மேற்கண்ட நாட்களை நினைவில் வைத்துக் கொண்டால் எந்த நாளில் என்ன காரியங்கள் செய்தால் பலன் கிடைக்கும் என்பதை எளிதாக அறிந்து கொள்ளலாம்.

இதுபோன்ற எளிமையான விஷயங்களை நாமே அறிந்து கொண்டால் அந்த அந்த நாட்களுக்குரிய பணிகளில் ஈடுபட்டால் வெற்றி நிச்சயம் கிடைக்கும்.

நமது முன்னோர் பல விஷயங்களை மிக நுணுக்கமாக அலசி ஆராய்ந்து அனுபவப் பூர்வமாக விளக்கியும் வைத்துள்ளனர். ஆனால் நாம்தான் பயன்படுத்தாமல் அவற்றை அலட்சியமாக விட்டுவிட்டோம்.

இதுபோன்ற நல்ல சிறு தகவல்களை நமது சந்ததியினர்களுக்கு நாம் எடுத்துரைத்தால் அவர்களின் தொழிலுக்கும், வாழ்க்கைக்கும் மிக உறுதுணையாக இருக்கும்.

– சர்வம் கிருஷ்ணார்ப்பயாமி









## பித்ரு தோஷம், திருமண தோஷம், துன்பங்கள், மன சஞ்சலம் தீர்க்கும்

# தாமிரபரணி

## மகாபுஷ்கரத்திருவிழா

'புஷ்கரம்' என்பது 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை புனித நதிகளில் நடைபெறும் கும்பமேளா. 'மகாபுஷ்கரம்' என்பது 144 (12×12) ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் கும்பமேளா. பிரம்மாவின் கையில் உள்ள தீர்த்தம் புஷ்கரம் எனப்படும். குருபகவான் கடும் தவமிருந்து பிரம்மாவிடமிருந்து இதைப் பெற்றார்.

நம் நாட்டில் உள்ள முக்கியமான 12 நதிகள் 12 ராசிகளுக்குரியவைகளாகச் சொல்லப்பட்டுள்ளன. அதன் விவரம் வருமாறு:

| இராசி | நதி |
|---|---|
| மேஷம் | கங்கை |
| மிதுனம் | சரஸ்வதி |
| சிம்மம் | கோதாவரி |
| துலாம் | காவிரி |
| தனுசு | சிந்து |
| கும்பம் | பிரம்மநதி |

| இராசி | நதி |
|---|---|
| ரிஷபம் | நர்மதை |
| கடகம் | யமுனை |
| கன்னி | கிருஷ்ணா |
| விருச்சிகம் | தாமிரபரணி |
| மகரம் | துங்கபத்ரா |
| மீனம் | பிரணீதா |

குருபகவான் எந்த ராசியில் சஞ்சரிக்கிறாரோ, அந்த ராசிக்குரிய நதியில் பிரம்ம புஷ்கரம் தங்கியிருக்கும்.அப்போது, பிரம்மா, விஷ்ணு, சிவன் தமது தேவியருடன் அந்த நதியில் தங்கியிருப்பர். இந்திரன் முதலான முப்பத்து முக்கோடி தேவர்கள் மற்றும் நதி தேவதைகளும் அந்த நதியில் தங்கியிருப்பர்.

நதிகளெல்லாம் தெய்வீகம் வாய்க்கப் பெற்றவைகள் என்று கருதுவது நம் நாட்டு ஐதீகம் ஆகும். இயற்கையாக அமைந்த நீர் நிலைகளில் தெய்வத் தன்மை உண்டு. அதில் மகிமை காண்பவர் அதனுள்ளே கடவுள் உறைந்திருப்பதை உணர்கின்றனர். தென் தமிழக நதிகளில் தெய்வ சொரூபமாக விளங்குவது தாமிரபரணி.

### ஈசனால் உருவாக்கப்பட்ட தாமிரபரணி

சிவபெருமான் அகத்தியரை ''தென் நாடு செல்க'' எனக் கட்டளையிட்ட போது அகத்தியர், ''அது தமிழ்நாடு. தமிழ் பாஷை தனக்குத் தெரியாது. ஆதலின், அதை தமக்கு உணர்த்துக'' என சிவபெருமானிடம் கேட்டார். உடனே, தம் அருகே அவரை அமரவைத்து, தமிழைக் கற்றுக் கொடுத்தார் ஈசன். (தமிழ் மொழி அகத்தியர் காலத்துக்கு முன்னரே இருந்தது என்பது இதனால் தெள்ளத் தெளிவாய் தெரிய வருகிறது).

ஈசனிடம் தமிழைக் கற்றுக் கொண்டு பொதிகை மலையில் வந்து அமர்ந்தார் அகத்தியர். அவர் முன் சூரிய பகவான் தோன்றி, தமிழ் இலக்கணங்களை அவருக்குக் கற்றுக் கொடுத்தார். பின்னர், முதல் தமிழ்ச் சங்கத்தின் முதல்வராயிருந்து தமிழை வளர்த்தார் அகத்தியர். அகத்தியர் ஸ்நானம் செய்யும் பொருட்டு, சிவபெருமான் பொதிகை மலையில் ஒரு நதியை உருவாக்கி, அதை அவருக்கே தானமாகக் கொடுத்தார்.

தாம்பிர வர்ணத்தில் இருந்ததால் அந்நதிக்கு ''தாம்பிர வர்ணி'' என்று முதலில் பெயர் சூட்டப்பட்டது. காலப் போக்கில் அது தாமிரபரணி என்றாயிற்று.

### 143 படித்துறைகள்

அகத்தியருக்காக ஈசனால் உருவாக் கப்பட்டு, வற்றாத ஜீவ நதியாய் ஓடிக் கொண்டிருக்கும் இந்நதிக் கரையில் ஏராளமான திருக்கோவில்கள் உள்ளன.

பாபநாசம் முதல் புன்னைக்காயல் (முகத்துவாரம்) வரை இந்நதிக்கரையில் மொத்தம் 143 படித்துறைகள் அமைந்துள்ளன.

இப்புனித நதிக்கரையில் அமைந்துள்ள நெல்லை குறுக்குத்துறை படித்துறையில் 12. 10.2018 அன்று மகாபுஷ்கரத்திருவிழா இந்து



மடாதிபதிகளால் தொடங்கி வைக்கப்பட இருக்கிறது.

## விருச்சிக ராசியில் குருப்பெயர்ச்சி

திருக்கணித பஞ்சாங்கப்படி விருச்சிக ராசியில் 11.10.2018 (வியாழன்) அன்று இரவு 7.20 மணிக்கு குருபகவான் பிரவேசிக்கிறார். மறுநாள் 12.10.2018 (வெள்ளி) அன்று தாமிரபரணி (ஆத்ய) புஷ்கரம் ஆரம்பம்.

23.10.2018 (செவ்வாய்) அன்று புஷ்கரம் பூர்த்தியாகும். மொத்தம் 12 நாட்கள் இந்த விழா நடக்க இருக்கிறது.

இந்த 12 நாட்களும் 12 ராசிகளைக் குறிப்ப தாகும். அதன் விபரம் வருமாறு:

| தேதி | கிழமை | இராசி |
|---|---|---|
| 12.10.2018 | வெள்ளி | விருச்சிகம் |
| 13.10.2018 | சனி | தனுசு |
| 14.10.2018 | ஞாயிறு | மகரம் |
| 15.10.2018 | திங்கள் | கும்பம் |
| 16.10.2018 | செவ்வாய் | மீனம் |
| 17.10.2018 | புதன் | மேஷம் |
| 18.10.2018 | வியாழன் | ரிஷபம் |
| 19.10.2018 | வெள்ளி | மிதுனம் |
| 20.10.2018 | சனி | கடகம் |
| 21.10.2018 | ஞாயிறு | சிம்மம் |
| 22.10.2018 | திங்கள் | கன்னி |
| 23.10.2018 | செவ்வாய் | துலாம் |

ஒவ்வொருவரும் தமது ஜென்ம ராசிக்குரிய தேதி, கிழமையில் நீராடுவதால் முழுப்பலன் கிட்டும். குடும்பத்தலைவரோடு தொலை தூரத்திலிருந்து நீராட வருகின்றவர்கள் குடும்பத் தலைவரின் (தந்தையின்) ஜென்ம ராசி எதுவோ அந்த ராசிக்குரிய நாள், கிழமையில் நீராடினாலே போதும். அது குடும்பம் முழுவதும் பிரகாசத்தைக் கொண்டு வரும். 12 நாட்களிலும் தொடர்ந்து நீராடுவது இந்தியாவில் உள்ள அனைத்து புனித நதிகளிலும் நீராடுவதற்குச் சமம்.

## தானம் கொடுத்தல்

இந்த 12 நாட்களிலும் தாமிரபரணிக் கரையில் தானம் செய்வது சிறப்பு. தானங்களுள் ‘கோ தானம்’ பரம தர்மம் எனப்படும். நல்ல பசுவைத் தானம் செய்வதால் மோட்ச சித்தி உண்டாகும் என்று புராணங்கள் கூறுகின்றன.

## சிரார்த்தம் (திதி) கொடுத்தல்

இந்த 12 நாட்களிலும் தாமிரபரணி நதிக்கரையில் நம்முன்னோர்களுக்கு சிரார்த்தம் (திதி) கொடுப்பதும் சிறந்ததாகும். இதனால் பித்ருதோஷம் விலகி, உங்கள் வாழ்வு பொலிவும் வலிவும் பெறும். பாபநாசம் முதல் புன்னைக் காயல் வரை உள்ள எந்த படித்துறையிலும் புனித நீராடலாம். தானம் செய்யலாம். சிரார்த்தம் கொடுக்கலாம்.

## நீராடல் விதிகள்

1. நீராடப் போகிறவர்கள் செருப்பு போட்டுக் கொண்டும், குடை பிடித்துக் கொண்டும் செல்லக் கூடாது.
2. நதிக்கரையில் உள்ள மண்ணை எடுத்துத் தன் உடம்பில் பூசிக் கொண்டு, நதியை வணங்கி அதனுள் இறங்க வேண்டும்.
3. சிகப்பு, கருப்பு, நீலநிற வஸ்திரம், தலைப்பு இல்லாத வஸ்திரம், ஓரத்தில் நீலக்கரை, கருப்பு கரை போட்ட வஸ்திரம் இவைகளை உடுத்திக் கொள்ளக் கூடாது.
4. புனித குளங்களில் நீராடும் போது சூரிய பகவானுக்கு எதிர் முகமாக நின்று நீராட வேண்டும் என்பது விதி. ஆனால், புனித நதிகளில் நீராடும் போது, நதியின் பிரவாகத் திற்கு (ஓட்டத்திற்கு) எதிர் முகமாக நின்றே நீராட வேண்டும். முதுகைக் காட்டக் கூடாது.
5. நதியில் உள்ளம்குளிர குடைந்து மூன்று முறை மூழ்கி எழ வேண்டும். ஒவ்வொரு முறையும் ‘‘ஹரி, ஹரி’’ என்று சொல்ல வேண்டும்.
6. ஆண்கள் அரைஞாண்கயிறு இல்லாமல் நீராடுதல் கூடாது. அரைஞாண் கயிற்றில் வேஷ்டியை கட்டிக் கொண்டும் நீராடக் கூடாது. இது வேஷ்டி இல்லாததற்குச் சமம்.
7. பெண்கள் தலைமுடியை முன்புறம் போட்டுக் கொண்டு நீராட வேண்டும். பின்புறம் போடக் கூடாது.
8. நீராடும் போது எச்சிலைக் காறி உமிழ் வதும், சிறுநீர் கழிப்பதும் பாபச் செயலாகும்.
9. நதியினுள் ஈரத்துணிகளைப் பிழியக் கூடாது. கரைக்கு வந்தே பிழிய வேண்டும்.
10. நீரிலிருந்து வெளியே வந்து தலைமயிர்களை உதறக் கூடாது.
11. நீராடி முடித்தவுடன், காய்ந்த வஸ்திரத்தை மேலே சுற்றிக் கொண்டு, ஈர வஸ்திரத்தைக் கீழாக விட வேண்டும். மேலாக எடுத்துப் போடக் கூடாது.
12. நெற்றியில் கோபி சந்தனம் பூசிக் கொண்டு நதியை மீண்டும் ஒருமுறை வணங்கி முடிக்க வேண்டும்.

சூரிய உதயத்திற்கு முன்பு நான்கு நாழிகைகள் (96 நிமிடங்கள்) அருணோதய கால மாகும். இந்த 96 நிமிட காலத்தில் நீராடுவது மிக மிகப் புண்ணியமாம்.

திருமணமாகாத ஆண், பெண்கள் அதி காலை வேளையில் நீராடி னால் மட்டுமே நற்பலன் கிட்டும். திருமணமானவர்கள் அதிகாலை, மதியம் ஆகிய இரண்டு வேளைகளிலும் நீராடலாம். சந்நியாசிகள் அதிகாலை, மதியம், சூரிய அஸ்தமனம் ஆகிய மூன்று வேளைகளிலும் நீராடலாம்.

தாமிரபரணிக் கரையில் உள்ள குரு ஸ்தலங்கள்

## 1. திருக்குருகூர் (ஆழ்வார் திருநகர்):

நவதிருப்பதிகளுள் ஒன்றான இந்த ஸ்தலம் தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் அருகில் உள்ளது.

இந்த ஸ்தலத்தில் பாயும் தாமிரபரணி ‘பிரம்ம தீர்த்தம்’ என்று அழைக்கப்படுகிறது.

நம்மாழ்வார் அவதரித்த பெருமை இந்த ஸ்தலத்திற்கு உண்டு. அவர் 11 பாசுரங்கள் பாடி மங்களா சாசனம் செய்துள்ளார்.

குருவின் அம்சமாக ஆதிநாதப் பெருமாள் ஆதிநாதவல்லி (குருகூர்வல்லி) இங்கே அமர்ந் துள்ளனர்.

## 2. முறப்பநாடு:

தாமிரபரணிக் கரையில் உள்ள நவ கைலா யங்களுள் ஒன்றான இந்த ஸ்தலம், தூத்துக்குடி மாவட்டம் வல்லநாடு அருகில் உள்ளது.

இங்கே கைலாச நாதர் குருவின் அம்சமாக அமர்ந்துள்ளார். மகாபுஷ்கர புண்ணிய நாட்களில் இவ்விரு ஸ்தலங்களிலும் நீராடுவது அதிக மகிமையானது.

## குரு தோஷம் நீங்க

நவக்கிரகங்களில் குருபகவானை ‘புத்திர காரகன்’ என்று ஜோதிட சாஸ்திரம் கூறும், புத்திர உற்பத்திக்குக் காரண கர்த்தா இவரே. குருபகவானின் அனுக்கிரகம் நிரம்பப் பெற்ற இவ்விரு தலங்களிலும், தாமிரபரணியில் புனித நீராடினால் புத்திரப்பேறு கிட்டுவது நிச்சயம். குருதிசை, குருபுத்தி நடப்பில் உள்ளவர்கள் மற்றும் குரு தோஷத்தால் பாதிக்கப்பட்டு, முன்னேற இயலாத நிலையில் இருப்பவர்கள், இங்கே வந்து நீராடினால் மல்லிகை, முல்லை போல மணக்கும் வாழ்வு. புஷ்கர நீராடலால் புது வாழ்வு புஷ்பிக்கும். அதற்கு இப்போதே ஆயத்தமாவீர்!



ஒவ்வொருவரின் இமெயில் முகவரியை தேடி வரும்

# திருமண வரம் தரும் முருக மந்திரம்

## கிருபானந்தவாரியார் கூறிய திருப்புகழின் அற்புதம்

விரைவில்...
aanmeegamalar.com
இணையதள செய்திகள்
இ–புக் போன்றவற்றை
செல்போனிலேயே
பார்க்க
தயாராகிறது
mobile app:
Google play
Dal web ai dispositivi Android

திருமணம் விரைவில் நடைபெற உதவும் முருகனின் திருமந்திரத்தினை பற்றி இந்த பதிவில் பார்போம்.

திருமணத்துக்கு வரன் தேடிக்கொண்டு இருக்கின்ற பெற்றோரை கேட்டால், ஜோதிடத்தில் ஏதோவொரு தோஷத்தின் காரணமாக தான் என் மகனுக்கு அல்லது மகளுக்கு இவ்வளவு ஆண்டுகள் திருமணம் தாமதம் ஏற்படுகின்றது என்று மக்கள் கூறுவார்கள். அந்த அளவுக்கு மக்களுடன் ஒன்றாக கலந்துவிட்டது ஜோதிடத்தின் மீது உள்ள நம்பிக்கை.

சில நேரங்களில் ஜோதிடத்தையும் பின்னுக்கு தள்ளும் அளவிற்கு விளங்குகின்றது இறைவனின் மீது நாம் வைக்கும் பற்று ஆகும். ஜோதிட சாஸ்திரங்கள் நம்மை கைவிடும் பொழுது இறைவனின் அருள் நமக்கு கைகொடுக்கின்றது. அந்த வகையில் முருகனின் அருள் முன் வந்து நம்மை காத்து நிற்கும் மந்திரம் தான் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.



திருமண தடை உள்ளவர்கள் முருகனின் மீது முழு நம்பிக்கையுடன் இந்த மந்திரத்தை பாராயணம் செய்ய விரைவில் திருமணம் நடைபெறும் என்பது நம் முன்னோர்கள் நம்பிக்கை. கலியுக கடவுளான முருகனின் திருப்புகழில் ஒரு பகுதியை நமக்கு எடுத்துத் தருகிறார் நம் கிருபானந்த வாரியார் சுவாமிகள்.

வெறும் வார்த்தையாக இல்லாமல் உறுதியாகவும் நிச்சயமாகவும் கூறுகிறார்.

ஒரு மண்டலம் அதாவது 48 நாட்களுக்குள் திருமணம் நடைபெறும் என்று தன்னுடைய உரையில் தெரிவித்துள்ளார். இதற்கு அருணகிரி நாதர் முருகனைப் பற்றிப் பாடி அருளியமந்திர திருப்புகழை திருமணம் ஆகாதவர்கள் தினமும் காலை அல்லது மாலை வேளையில் ஒரு நாளைக்கு 6 முறை வீதம், 48 நாட்கள்தொடர்ந்து பாராயணம் செய்தால் கண்டிப்பாக எந்த விதமான திருமணதோஷங்கள் இருந்தாலும் அத்தனையையும் நீக்கி 48 நாள் முடிவதற்குள் திருமணம் தொடர்பான நல்ல பதில் கிடைக்கும்.

திருமணம் ஆனவர்கள் இந்தத் திருப்புகழை படித்தால் குடும்பத்தில் விட்டு சென்ற உறவுகள் சேரும் என்பதும் நிதர்சனமான உண்மையாக விளங்குகிறது.

"விறல்மார னைந்து மலர்வாளி சிந்த
மிகவானி லிந்து வெயில்காய

மிதவாடை வந்து தழல்போல வொன்ற
வினைமாதர் தந்தம் வசைகூற

குறவாணர் குன்றி லுறைபேதை கொண்ட
கொடிதான துன்ப மயில் தீர

குளிர்மாலை யின்க ணணிமாலை தந்து
குறைதீர வந்து குறுகாயோ

மறிமா னுகந்த இறையோன் மகிழ்ந்த
வழிபாடு தந்த மதியாளா

மலைமாவு சிந்த அலைவேலை யஞ்ச
வடிவே லெறிந்த அதிதீரா

அறிவா லறிந்த னிருதா ளிறைஞ்சு
மடியா ரிடைஞ்சல் களைவோனே

அழகான செம்பொன் மயில்மே லமர்ந்து
அலைவா யுகந்த பெருமாளே."

– ஓம் சரவண பவ...



# பெரியவங்க சொன்னதைக் கேட்டுக் கடவுளைக் காண செல்கிறேன் காஞ்சிமகான்



மகா பெரியவர் நாத்திகர்களுக்கு (atheist) கூறிய சம்பவம்

ஒரு முறை திருவான்மியூரில் பெரியவா திருமுன்னர் காலில் செருப்பு, சூட் கோட்டுடன் மரியாதை இல்லாமல் குறுக்கே நின்றான்.

அவன் ஸ்வாமிகளிடம் நெஞ்சை நிமிர்த்தி, “ஏன் கல்லில் பால் ஊத்தற? அதையே செய் என்று எல்லாருக்கும் ஏன் சொல்ற!” என்று சுடுசொல் சொன்னான்.

அருகில் இருந்த எல்லாரும் அதிர்ச்சியும், ஆத்திரமும் அடைந்தனர். ஸ்வாமிகள் கையசைப்பில் அனைவரும் ஒதுங்கி நின்றனர்.

## காஞ்சி மஹாஸ்வாமிகள் பாதுகை



காஞ்சி மஹாஸ்வாமிகள் பயன்படுத்திய பாதுகை. வெள்ளிக்கவசம் சாத்துவதற்காக வந்தது. ஆன்மிகமலர்.காம் அன்பர் ஒருவர் படமெடுத்து, வாட்சப்பில் அனுப்பிவைத்தார்.

ஹர ஹர சங்கர ஜெய ஜெய சங்கர

பெரியவா மிகவும் அன்புடன் அவனை நெருங்கினார். அந்த இளைஞனிடம், “எங்கே போறே? என்று கேட்டார். “கிண்டிக்கு” என்றான் அவன்.

ஸ்வாமிகள், “இப்படிப் போனா கிண்டி போலாமா?” என்று கேட்டார். “அதுதான் கைகாட்டி, பெயர்ப் பலகை எல்லாம் இருக்கே!” என்றான். “இது எவ்வளவு நாளாக இருக்கு?” என்றார் பெரியவா.

“ரொம்ப நாளா இங்கேதான் இருக்கே! தெரியாதா?”

“நீ பிறக்கும் முன்னேயே இந்தக் கைகாட்டி இருந்ததா?”

“ஆமாம் எங்கப்பா, தாத்தா காலத்திலேன்னு பெரியவங்க சொன்னாங்க!”

“அப்பவே கிண்டி, இந்த ரோடு எல்லாம் இருந்ததா?”

“ஆமாம்”

“இந்தக் கைகாட்டியைப் பார்த்து இது காட்டும் திசையிலே போனா, கிண்டி வந்திடுமா?”

“அது வராது, நாம கிண்டிக்குப் போகலாம்”

“நீ இதப் பார்த்துட்டுத் தான் முதன் முதல்லே கிண்டி போனாயா?” ஸ்வாமிகள்.

“ஆமாம்”

“அப்போ உன் கண்ணுக்கு கிண்டி தெரிஞ்சுதா?”

“அதெப்படித் தெரியும்? கிண்டி இன்னும் அஞ்சு கிலோ மீட்டர் தூரத்தில் இருக்குன்னு போர்டுல எழுதி இருக்கே! உன்னால அஞ்சு கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறதைப் பார்க்க முடியுமா?” என்றான் இளைஞன்.

“அப்படீன்னா, உன் கண்ணுக்குத் தெரியாத கிண்டியை இந்த போர்டைப் பார்த்துத் தெரிந்து கொண்டாயா?”

“ஆமாம்”

“இந்தப் போர்டைப் பார்த்து அது காட்டும் திசையிலே நேரா, எங்கும் வளையாம நடந்தா போயிடலாமா?”

“முடியாது இந்த ரோட்டிலே நாமாக வளைஞ்சு வளைஞ்சு போகணும்!”

“இந்த போர்டை இங்கே யார் வச்சாங்க?”

“எனக்குத் தெரியாது, முன்னாலே இருந்த வங்க இதுதான் கிண்டிக்குப் போகிற வழின்னு தெரிஞ்சு கொண்டு இதை வைச்சிருப்பாங்க”

“அப்படீன்னா என்னிக்கோ யாரோ வெச்ச கைகாட்டியை நாமாகப் பார்த்துத் தெரிஞ்சுண்டு, நாமே வழியைச் சரியாகப் பார்த்துப் பார்த்து வளைஞ்சு வளைஞ்சு போனால் கிண்டிக்குப் போகலாம் அப்படித் தானே?”

இளைஞனுக்கு வேகம் குறையத் தொடங்கியது!!

“நானும் அப்படித்தான் பெரியவங்க சொன்னதைக் கேட்டுக் கடவுளைக் காண்பதற்கு அவங்க போட்ட பாதையிலே செல்கிறேன்! வழியில் இருக்கிற தடங்கல்களை நானாக யோசனை செய்து, தாண்டியும், விலகியும் போய்க் கொண்டிருக்கிறேன்!” என்றார்.

இளைஞன் திகைத்தான்.

“கிண்டிக்குப் போய் மீண்டும் வந்து இதுதான் வழின்னு காட்டினவங்களை நீ சந்தேகப்பட்டால், உன்னால் கிண்டிக்குப் போக முடியுமா? அதுபோலத்தான் நம் ஆண்டவனைக் கண்டவர்கள் காட்டின வேதம், உபநிஷதம் பூஜை முறை எல்லாவற்றிலும் சந்தேகமே கொள்ளாமல் முழுமையான நம்பிக்கையுடன் அவர்கள் காட்டிய வழியில் போகிறேன்” என்றார்.

அந்த இளைஞன் சற்று விலகிப்போய் தன் செருப்புகளைக் கழற்றி எறிந்து விட்டு, ஓடோடி, வந்து ஸ்வாமிகளின் திருவடிகளில் சாலையில் வீழ்ந்து, கண்ணீர் விட்டான்...

பெரியவா சரணம்.

# இறைவனை அறிந்துள்ள ஆன்மீக குருவை நாடவும்

பூஜ்ய குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் அருளுகிறார்: அவருடைய வாழ்க்கையில் கீழ்க்கண்ட ஒரு நிகழ்வினை தன்னுடைய சொற்பொழிவின்போது உரையாற்றியுள்ளார். “நீங்கள் தப்பெண்ணங்கள் மற்றும் மனநிலைகள், மற்றும் உணர்ச்சிகள் ஆகியவற்றின் காரணத்தால், உங்களின் சொந்த மனதை உண்மையில் அதை உள்ளபடியே பல நேரங்களில் காண்பதில்லை. ஆகவே எவ்வாறு உங்களின் எண்ணங்களை ஆராய்வது மற்றும் திருத்துவது என்று காட்டக்கூடிய யாரேனும் ஆன்மீக குருவையோ அல்லது போதனை களையோ நாடுவது விவேகமானது.



இறைவனுடன் தோழமை கொண்டுள்ளவர்களுக்கு உண்மையான புரிந்து கொள்ளும் ஞானம் இருக்கின்றது. இறைவனுடன் ஒன்றிய அனைத்து ஆன்மாக்களும் இறைவனின் விவேகத்துடனான இசைவின் மூலம் அவர்களின் புரிந்துகொள்ளும் ஞானத்தை தெளிவு படுத்தி யிருக்கின்றனர். அவர்களுடனான தொடர்பு உங்களுக்கு ஒளியைத் தரும். நான் எனது குரு ஸ்வாமி ஸ்ரீ யுக்தேஸ்வரரை, அவர் எனது ஆன்மீக குரு என்பதால் மட்டுமல்லாது, அவர் எனக்கு அந்த புரிந்துகொள்ளும் தன்மையை அளித்தார் என்பதால் மதித்தேன். எனது அகப்பார்வையின் எந்தத் தெளிவிற்கும், எனது குடும்பத்திற்கோ அல்லது வேறு எவருக்குமோ அல்ல. அவருக்கு மட்டுமே முற்றிலும் கடமைப்பட்டிருக்கின்றேன். நான் எனது பெற்றோர்களை நேசித்ததைவிட அதிகமாக வேறு எவரும் நேசித்ததில்லை. ஆனால் எனது குரு எனக்கு போதித்த அகப்பார்வையின் தெளிவு, உண்மையின் பாதையில் என்னை அசைக்கமுடியாதபடி செய்தது.

நான் உலகைத் துறப்பதற்காக வீட்டை விட்டு, காசிக்குச்சென்றது என் நினைவிற்கு வருகின்றது; நான் பணத்தால் வாங்க முடிந்ததைவிட மிகச்சிறந்த ஒன்றைத் தேடிச் சென்றேன். நான் செல்வந்தர்களின் வாழ்க்கைகளை ஆராய்ந்திருந்தேன். மேலும் நான் அவர்களது வாழ்க்கையைப்போன்று வாழ விரும்பியதில்லை. நான் முயற்சி செய்திருந்தால் அதற்காக வருந்தியிருப்பேன் என அறிவேன். நான் விரும்பியிருந்திருக்கக்கூடிய பல பொருட்கள் மற்றவர்களிடம் இருந்ததைக் கண்டேன். அத்துடன் நான் அவர்களின் வழியை பின்பற்றியிருந்தால் எனக்கு என்ன நேர்ந்திருக்கும் என்று ஆராய்ந்தேன். நான் ஒருபோதும் இன்பமாக இருந்திருக்கமாட்டேன் என்பதைத் தெளிவாகக் கண்டேன்.

நான் காசியிலிருந்தபோது, இறைவன் எனக்கு என் குருவைக்காண்பித்தான். பின்னர், அவரது ஆசிரமத்தில், ஒருநாள் அவரிடம் கூறினேன். “என் வீட்டிலிருந்து அழைப்பு வந்திருக்கின்றது. நான் என் தந்தையைக் காணச்செல்லவேண்டும். அவர் என்னை மிக அதிகமாக நேசிக்கின்றார்.”

என் குடும்பத்தினர் என்னை பிடித்துவைத்துக் கொள்ள முயற்சி செய்வார்கள் என்பது குருவிற்கு தெரியும். அவர், “செல்லாமிலிருப்பது நல்லது; உன்னால் திரும்பி வர முடியாமல் போகலாம்” என்று ஆலோசனை கூறினார்.

ஆனால் நான் கூறினேன், “குருதேவா, நான் திரும்பி வருவதாக உறுதியளிக்கின்றேன்.” ஏனெனில், எனக்கு வேறு எந்த வாழ்க்கையும் இல்லை என்பது நான் அறிந்திருந்தேன். பெற்றோர்களிடத்தில் அன்பு என்பதும், பெற்றோர்களுடன் பந்தம் என்பதும் வெவ்வேறானவை. பந்தம், புரிதலை மறைக்கின்றது. தெய்வீக அன்பு ஒருபோதும் கண்மூடித்தனமாகாது. நான், எனது குடும்பத்திலுள்ள எவரையும் விட மிக அதிகமாக எனது பெற்றோரை நேசிக்கின்றேன் என்று எனக்குத் தெரியும். அத்துடன் எனது வாழ்க்கையை இறைவனுக்கு அர்ப்பணித்ததன் மூலம் மற்ற முறைகளில் என்னால் முடிந்திருப்பதைவிட நான் அவர்களுக்கு மிக அதிகமாகச் செய்திருக்கின்றேன்.

நான் வீட்டிற்குச் சென்றபோது உணர்ச்சி வேகத்திற்கு இடம் கொடுக்காமலிருக்கும் என் தந்தை (இந்தச் சொற்பொழிவின் போது பரமஹம்ஸரின் தந்தை வாழ்ந்துகொண்டிருந்தார். மூன்று வருடங்களுக்குப்பின் அவர் காலமானார்.) என்னைக் கண்டதும் தனது கண்களில் கண்ணீர் மல்க நன்றி பாராட்டினார். அவர், “நீ திரும்பி வந்துவிட்டாய்; நான் மகிழ்ச்சியடைகிறேன்”

என்று கூறினார். அந்த சில சொற்களில் மிக அதிக அர்த்தம் பொதிந்திருந்தது. அவரது பாசம் மிக ஆழமாக இருந்தது. அவர் அதை ஒருபோதும் வெளிக்காட்ட விரும்பியதில்லை. ஒரு சிறந்த மகான் கூறியதுபோல், “நீ உனது அன்பை உச்சரித்த கணமே, அந்தத் தூய்மையான உணர்வின் ஒரு பாகம் உனது இதயத்திலிருந்து பறந்து, வாயின் துர்நாற்றத்துடன் கலந்து விடுகின்றது; உதடுகளின் கிருமிகளும் கறைகளும் அதை மாசுபடுத்திவிடுகின்றன.” இறைவன் மற்ற எவரையும்விட உங்களை அதிகமாக நேசிக்கின்றான். அதனால்தான் அவன் உங்களிடம் கூறுவதில்லை. அவன் தனது அன்பை மெய்ப்பித்துக்காட்டுதல்கள் மூலம் மௌனமாக காட்டுகின்றான். நான் எனது ஆன்மீகப்பாதையில் முன்னேறியபோது, எந்த மனிதரிடமிருந்தும் என்றும் பெற்றிருக்கமுடிந்திருப்பதைவிட அதிக அன்பை இறைவனிடமிருந்து பெற்றேன்.”

எனது கதைக்குத் திரும்பலாம்: ”நான் எனது தந்தையின் முன் நின்றபோது, அவர் என்னை, காலமான (பரமஹம்ஸர், ஸ்வாமி மரபில் சன்னியாசியாகச் சேர்ந்த சிறிது காலத்திற்குப் பின்பு 1916ல் அனந்தலால் கோஷ் காலமானார்) என் அண்ணனின் இடத்தை பூர்த்தி செய்ய வீட்டில் இருக்கும்படி கேட்டுக்கொண்டார். தந்தை கூறினார், “ஒருவேளை நான் இறந்துவிட்டால், உனது இளைய சகோதர, சகோதரிகளை யார் கவனிப்பது?”

நான், “தந்தையே, இவ்வுலகில் இருக்கும் எவரையும் விட உங்களை நான் அதிகமாக நேசிக்கின்றேன்; ஆனால், நான் இத்தகைய தந்தையை கொடுத்த

43
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக

இறைவனை அதைவிட அதிகமாக நேசிக்கின்றேன்” என்று பதிலளித்தேன்.

“நான் இத்தகைய நேசிக்கும் பெற்றோரை எனக்குப் பரிசாகத் தந்திருந்த இறைவனை எப்படி விடமுடியும்? பரலோகத் தந்தை அவர் இதயத்தில் அன்பை வைத்திருக்கவில்லை என்றால், எனது பூவுலகத் தந்தை எப்படி என்னை நேசிக்க முடிந்திருக்கும்? இறைவனன்றி நமக்கு நேசிப்பவர்கள் எவரும் கிடைத்திருக்கமாட்டார்கள் என்பதால், இறைவனுக்கு கடமையாற்றுவது, அனைவருக்கான கடமைகளையும் பூர்த்தி செய்கின்றது. இது உண்மையான ஞானமாகும்.

தந்தையால் மேற்கொண்டு எதுவும் சொல்ல முடியவில்லை. அவர் புரிந்துகொண்டார். மேலும், “நான் மாயையின் நதியைக் கடந்துகொண்டிருக்கின்றேன்; நான் பலவீனமாகக்கூடாது என்பதால், நான் திரும்பிப் பார்க்கமாட்டேன்” என்று பாடிக்கொண்டு திரும்பிச் சென்ற போது, வீட்டிலிருந்த ஒவ்வொருவரும் அழுது கொண்டிருந்தனர். இவ்வுலக மதிப்பீடு களின்படி அவர்களை விட்டு விலகுவது மிகக்கொடுமையானதாகத் தெரிந்தது. ஆனால் அந்தத் துறவின்மூலம் தலைசிறந்த ஆசீர்வாதம் எனக்குக் கிடைத்தது. இறைவனுக்கு முதலில் சேவை செய்ததால், என்னால் கொடுக்கமுடிந்திருக்கும் எந்தப்பொருள் சார்ந்த உதவியையும்விட மிக அதிகமாக நான் ஆன்மீகத்தில் அவர்களுக்குச் செய்ய முடிந்தது.

ஒருசில வருடங்களுக்குப்பின், நான் இறை அனுபூதி பெற்றுத் திரும்பியபோது ராஞ்சியிலுள்ள எனது சிறுவர் பள்ளிக்கு தந்தையை அழைத்துச் சென்றேன். அப்போது அவர், “நான் உனக்குத் தகுதியானவன் இல்லை.” என்று கூறினார்.

“இல்லை, இல்லை. நான்தான் உங்களுக்குத் தகுதியானவன் இல்லை” என்று நான் மறுத்துக் கூறினேன்.

பின் அவர், “நீ ஏற்கவேண்டும் என்று நான் விரும்பிய ரயில்வே பணியில் சேர்வதற்கு நீ வராததற்கு நான் இப்போது மகிழ்ச்சியடைகின்றேன்”, என்று கூறினார். இவ்வாறு கூறி உரையை முடித்தார்.

இறைஅனுபூதியைப் பெறுவதற்கு குருதேவர் எவ்வளவு துன்பங்களை எதிர்கொண்டிருக்கிறார் என்பதை அவருடைய உரையிலிருந்து தெரியவருகிறது. முக்கியமாக அந்தத் துன்பங்கள் அவருடைய குடும்ப அங்கத்தினர்கள் மூலமாகத்தான் வந்துள்ளன. அவை ஒன்றும் பெரிதல்ல; இறைவன் மட்டும்தான் மேலானது என்று அவர் நமக்கெல்லாம் எவ்வளவு பெரிய பாடத்தை கற்றுத் தந்திருக்கிறார். அவர் இறைவன்மேல் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறார் என்றும் இறைவனை எந்த அளவு நேசித்திருக்கிறார் என்றும் குறிப்பிட்டுக் கூற முடியாது. அவர் இறைவன்மேல் அளவிட முடியாத அன்பு வைத்துள்ளார்; அதுபோன்று நாம் அனைவரும் இருக்கவேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார். அவர் ஒரு ‘மாதிரி’ (மாடல் ஆசான்) ஆசானாக இருந்தார்; இன்னும் இருக்கிறார். ஒரு குரு அவ்வாறிருந்தால் மட்டும்தான் மாணவர்கள் அவரை பின்பற்றுவதற்கும் இறைஅனுபூதி பெறுவதற்கும் வசதியாக இருக்கும். ஒரு சீடனுக்கு இறைவன் குறிக்கோளாக வருவது என்றால் அதற்குக் காரணகர்த்தாவாக இருப்பது ’குரு’ மட்டும்தான். எவ்வாறெனில் பல பிறவிகளில் ஏற்பட்டுள்ள குருசிஷ்ய உறவுதான் அதற்குக் காரணம்.

நம் அனைவருடைய வாழ்க்கையிலும் மிகமுக்கியமாகப் பெறவேண்டியது இறைவனின் அன்பை மட்டுமே. அது நாளடைவில் தீவிர இறைபக்தியை உருவாக்குகின்றது. அது, பின்னர் தீவிர இறைவெறியாக மாறுகிறது. இந்த நிலைதான் இறைஅனுபூதியை பெற்றுத் தருகிறது. இந்த நிலையை பெறுவதற்கு முன்னர் இறைவன் பல விதத்திலும் சோதிப்பான். ஆன்மீக வாழ்க்கையில் அடியெடுத்து வைக்கின்ற ஒரு மனிதன் அனைத்தையும் எதிர்கொள்ளத்தான் வேண்டும். உண்மையாக இறைவனை நேசிக்கின்ற ஒரு மனிதன் தனக்கு சோதனைகள் வரும்போது அவற்றை எளிதில் கடந்து செல்கிறான் என்றால், அவன் இறைஅனுபூதிக்குத் தயாராகிறான் என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். சோதனை காலத்தில் அவனுடைய மனம் கஷ்டப்பட்டாலும் அது சிறிதுநேரத்திற்கு மட்டும்தான். அவற்றைத் தாங்கக்கூடிய சக்தியை இறைவன் அருளுவான். சோதிப்பதும் துன்பங்களைத் தாங்கக்கூடிய சக்தியை கொடுப்பதும் இறைவன்தான் என்பதை உணரவேண்டும்; உணர்ந்தாலும் சோதிப்பான். மொத்தமாகத் தூய்மை அடைந்தால் சோதனையை நிறுத்திவிடுவான்.

சோதனை பல வடிவத்திலும் இருக்கும். முதலில் அதைப்புரிந்துகொள்வது மிகவும் கடினம். புரிந்துகொண்டால் எல்லாமே இறைவன்தான் என்பது புலனாகும். அதற்கு பயிற்சி தேவை. அதற்கான பயிற்சியே இறைவனின் சோதனைகள். அடிக்கடி வருகின்ற, தினமும் வருகின்ற சோதனைகளால் அனைத்திற்கும் காரணம் இறைவன் மட்டுமே என்பதைப் புரிந்துக்கொள்ளமுடியும். இறைவனிடத்தில் நிபந்தனையற்ற அன்பும் விசுவாசமும் யார் யார் வைத்துக்கொள்கின்றனரோ, அவர்களுக்கெல்லாம் அவனை புரிந்துகொள்வதற்கான வாய்ப்பினை அருள்வான். முழுமையாகப் புரிந்துகொள்ளும்வரை சோதித்துக்கொண்டேயிருப்பான். ‘இவ்வுலகில் இறைவனைவிட வேறு எந்தப்பொருளும் இல்லை’ என்பதை பக்தன் உணர்ந்தறியும்வரை சோதிப்பான். ஒருநாள் அந்த பக்தன் அதை உணர்வான். உணர்ந்த பின்னர் பேரானந் தமடைவான். எல்லாம் இந்தப் பிரபஞ்சம் முழுவதும்அவனே என்பதை மனப்பூர்வமாக, முழுமையாக உணர்வான்.

’ஜெய் குரு’

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909

## சிவ பூஜைக்கான



## மாதங்களும், மலர்களும்

சிவ பூஜை செய்ய ஒவ்வொரு மாதங்களுக்கும் ஒவ்வொரு மலர்கள் உகந்தவை. இந்த மலர்களால் பூஜை செய்தால் பல விருப்பங்களும் நிறைவேறும்.

சித்திரை ..................................பலாசம்,
வைகாசி .................................. புன்னை,
ஆனி ............................ வெள்ளெருக்கு,
ஆடி ........................................ அரளி,
ஆவணி ............................. செண்பகம்,
புரட்டாசி ..............................கொன்றை,
ஐப்பசி .....................................தும்பை,
கார்த்திகை ............................கத்திரி,
மார்கழி .......................................பட்டி,
தை ..................................... தாமரை,
மாசி................................ நீலோத்பலம்,
பங்குனி ............................ மல்லிகை.



ஆன்மீகம் • பக்தி • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com

# இந்து சமயத்தில் ஊடுருவிய புல்லுருவிகள்

## 19ம் நூற்றாண்டிற்கு பின் எழுதப்பட்ட போலி புத்தகங்கள்

இந்து சமயத்திற்கு பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு வகையில், பல தாக்குதல்கள் நடைபெற்று வருவதை வரலாற்றின் மூலம் நாம் பார்க்கலாம்.

அந்த வகையில் தற்போது இந்து சமயத்தையும் நமது மத கருத்துக்களையும் சிதைக்க எழுத்தாளர், கவிஞர்கள் போர்வையில் ஒருசில புல்லுருவிகள் ஊடுருவியுள்ளனர்.

இந்து சமயத்தின் மிக உயர்ந்த கருத்துக்களை திரித்தும், அருவருப்பை ஏற்படுத்தும் விதத்தில் கதை, கவிதைகளைப் புணைந்து எழுதிவருகின்றனர்.

இதுபோன்றவர்களின் நோக்கம், பணம் + பதவி மட்டுமே. சமுதாயத்தில் தங்களுக்குள்ள நற்பெயரையும், வாசக வட்டங்களைப் பயன்படுத்தி சமானிய மக்களிடம் வீணான வதந்திகளையும், பொய்களையும் திரித்து எழுதி வருகின்றனர்.

மாற்று மதத்தின் கருத்துக்களை தூக்கிப்பிடித்தும், ஒருசில கட்சிகளின் கொள்கைகளை புகழ்ந்தும் பேசி, மக்கள் மனதில் விஷத்தை பரப்பி வருகின் றனர். இதுபோன்ற கயவர்கள், இந்து மதத்தையும் தங்களது வாசகர்களையும் பிரித்து வைக்கும் கீழ்த்தரமான பணியை செய்வதற்கு பலனாக, பணத் தையும், பதவியையும் பெற்று வரும் அவலம் நிகழ்கிறது.

இதில் ஒருசில எழுத்தாளர்கள், பொய்யையும் புரட்டையும் தவிர்த்து இன்றும் தரமான எழுத் துக்களால் தங்களின் புனிதத் தொழிலை காத்து வருகின்றனர்.

பொய் புரட்டு எழுத்துக்களை ஆயுதமாக பயன்படுத்தி, இந்து மதத்திற்கு எதிராக விஷ சிந்தனையைப் பரப்புவதால், தங்களை புதிய சிந்த னையாளர், பகுத்தறிவாளர், புரட்சியாளர், போன்ற அடைமொழிபெயர்களை தங்களுக்கு தாங்களாகவே வைத் துக் கொண்டு திரிகின்றனர்.

இதனால், தற்போது புரட்சிக் கவிஞர், புரட்சி எழுத்தாளர் போன்ற அடைமொழியுடன் பல எழுத்தாளர்கள் சமுதா யத்தில் திரிந்து வருகின்றனர். இவர்களின் முக்கிய தாக்குலே இந்து மதத்திற்கு எதிரானதுதான், இதுபோன்ற புரட்சி எழுத்தாளர்கள் மாற்று மத கருத்துக்களை கையாள மிகவும் அஞ்சுகின்றனர்.

பொதுவாக இந்து மதத்தை, யார் என்ன கிறுக் கினாலும் அவ்வளவாக எதிர்ப்பு இருக்காது. ஆனால் மாற்று மதத்தைப்பற்றி ஒருசிறு தவறான எழுத்தை எழுதினாலும் எழுதியவன் உயிருக்கே ஆபத்து ஏற்படும் என்பதால் புரட்சி எழுத்தாளனும், புரட்சி கவிஞனும் அந்தப் பக்கம் தலைவைத்தும் பார்ப்பது கிடையாது.

தற்காலத்தில் விஞ்ஞான வளர்ச்சியும், தொழில் நுட்ப வளர்ச்சியும் அபரிமிதமாக வளர்ந்துள்ளதால், பல எழுத்தாளர்களின் சுவாரசியமற்ற கவிதையும், கதையும் சமுதாயத்தில் எடுபடாததாலும், வருமானம் இல்லாததாலும், வேறு தொழில் தெரியாத காரணத் தால், தற்போது இந்து மத துவேஷ எழுத்துக்களை ஆரம்பித்துள்ளனர்.

இதுபோன்றவர்களை வளைத்துப் போடும் மாற்று மதத்தினர், தங்கள் மதத்தை உயர்த்தியும், இந்து மதத்தினை தாழ்த்தியும் எழுத, இதுபோன்ற போலி எழுத்தாளர்களை பயன்படுத்திக் கொள் கின்றனர். தங்கள் மதத்தின் கொள்கை பரப்புச் செயலாளராகவே இவர்களை மாற்றி விடுகின்றனர். இந்து பெயரை மட்டும் பயன்படுத்தி, இவர்கள் மாற்று மதத்தினரின் கைகூலியாகவே மாறிவிடுகின்றனர்.

தற்போது இந்த கைகூலிகளின் எண்ணிக் கை நாளு க்கு நாள் பெருகிவருகிறது. இவர்களின் தேவைகளை மட்டுமின்றி இவர்களின் சொகுசான வாழ்க்கைக்கு, இந்து மத எதிரிகள் இவர்களுக்கு அபரிமிதமாக உதவுகின்றனர்.

இந்த வகையில் தற்போது சினிமாத்துறையைச் சேர்ந்த, படவாய்ப்பு இல்லாத நடிகர்கள், நடிகைகள், மட்டுமின்றி இசையமைப்பாளர், டைரக்டர் போன் றவர்களும், சமுதாயத்தில் தங்களுக்குள்ள பெயரையும் புகழையும் பயன்படுத்தி, இந்துமத எதிர்ப்பாளர்களாக மாறி சொகுசான வாழ்க்கை அனுபவித்து வருகின்றனர்.

இந்த புல்லுருவிகள் இப்போதுதான் புகுந்துள்ளனர் என்பது தவறான கண்ணோட்டமாகும். 19–ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே, இந்து மத விரோத எழுத்தாளர்களை வெளிநாடுகள் தத்தெடுத்து சுகபோக ஆசைகாட்டி, வளர்த்து வருகின்றனர்.

19ம் நூற்றாண்டின் துவக்கத்தில் வெளிவந்த பல்வேறு சமய புத்தகங்களும், ஆன்மிகபுத்தகங்களில் தேவையற்ற பிரச்சனையை கிளப்பும் பல்வேறு கருத்துக்கள் புகுத்தப்பட்டு, அதை பல அறிஞர்கள் எதிர்த்தும் வந்துள்ளனர். இந்தப் போக்கு தற்போது படிப்படியாக வளர்ந்து அபரிமிதமாக உள்ளதால் மக்கள் எளிதாக இனம் கண்டுள்ளனர். ஆன்மிகத்தில் விருப்பமுள்ள, ஆன்மிகத்தைப் பற்றி தெரிந்து கொள்ள முற்படும் அன்பர்கள் இதுபோன்ற திரித்துக் கூறப்பட்டுள்ள புத்தகங்களை படிப்பதால் அவர்கள் தவறான பாதையில் செல்ல நேரிடுகிறது.

இனியாவது ஒவ்வொரு இந்துக்களும் விழித்துக் கொள்ளவேண்டும். எந்த ஆன்மிக புத்தகமாக இருந்தாலும்19ம்நூற்றாண்டிற்குபின்எழுதப்பட்டிருந்தால் அந்தப் புத்தகத்தை முழுவதுமாக ஏற்காமல் தவிர்ப்பது நன்மை தரும். இந்து மதம் காக்க வேண்டுமானாலும், அற்புத இந்துமதக் கருத்துக்களை அறிந்து கொள்ள வேண்டுமானாலும் 19ம் நூற்றாண்டிற்கு முன்பு வந்த புத்தகங்களையும், அறிஞர்களையும் மட்டுமே நம் நம்பிக்கைக்குரியவர்களாக ஏற்பது நன்மை பயக்கும். இதை தற்போது பல அறிஞர்கள் வெளிப்படையாக கூறியும் வருகின்றனர்.

நாமும் இனி கலப்படம் இல்லாத ஆன்மிகத் தில் நுழைய, சாரல் மழையில் விளைந்த காளானைப் போன்ற புத்தகங்களை தவிர்ப்பது நன்மை பயக்கும்.

– நாகராஜன், போன் 08825844033



அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
செல்: 8825844033

•••

இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773

•••

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மூ.சக்திவேல் செல்: 9787576858
புனிதவேல் செல்: 9841807572

•••

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில்
நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033

www.aanmeegamalar.com





# பராசரர் புத்திரன்

பராசரர் தோன்றி உட்கார்ந்து இருந்தார். நாராயணன் 'ஏதாவது பண்ணு, சுயமாக வந்திருக்கிறாய்!' பராசரர் 'ஒரே ஒரு சாஸ்திரம் படைத்துவிடுகிறேன். மீதியை யாராவது செய்யட்டும்.'

அந்த ஒன்று தான் டைம். சூரியகாந்தச் செடி... சூரியனைப் பார்த்து ஒரு புஷ்பம் வளரும். மாலையில் தலை குனியும். மதியம் நேரே பார்க்கும். அதனுள் வித்து பரம்பரையாக வளரும்...அதை நடுவதற்கு டைம் மழை பெய்ய வேண்டும். இல்லாவிட்டால் தண்ணீர் ஊற்று. எப்போதும் ஊத்தினால் அழுகிப் போய்விடும். அதுதான் ஜோதிடம் அஸ்ட்ரோநமி. கோள்கள் அதற்கு உபகரணமாக சூரிய தசை 6 வருடம்.. தாய் கர்ப்பம் 3 வருடம். எப்படி?

இதோ மாவிளக்கு மாவு மறைந்து போயிற்று இதுதான் ஜோதிடம். பராசரர் ஜோதிட சாஸ்திரத்தைப் படைத்தார். பகவான் ஆஞை. அவருக்கு குழந்தை, பரம்பரை வேண்டும். கங்கை பிரும்மபுத்திரா நதியில், இவரை மகான் என்று அறிந்து, படகு ஓட்டி அக்கரைக்கு படகை ஓட்டினான். பராசரர் 'காசு இல்லை' படகு ஓட்டி 'ஏறுங்க சுவாமி ஜீ'.

ஏறியவர் மகான் என்று தெரியும், அவருக்கு பகவான் கட்டளைப்படி சத்புத்ரன் பிறப்பான். அதற்குள் கிராஸ் பண்ணிப் போக வேண்டும். குறித்த நேரம் ஆகாயத்தில் வந்துவிட்டது. 'ரிஷி கர்ப்பம் ராத்தாங்காது'. அவர் ஒரு பெண்ணைப் பார்த்து 'மங்களமுடன் இருப்போம்' என்று நினைத்தால் குழந்தை பிறந்துவிடும்.

ஓடக்காரன் பெண் இருந்தாள். உத்தரவு கேட்க வேண்டும். அவன் காதில் ஓம்காரம் சொல்லி கேட்டார் 'நாராயணன் அவதாரம் வரவேண்டும். விட்டால் போய் விடுவான்' அவரவர் வேகம் சொல்லாமல் இருப்பார்களா? ஓடக்காரன் 'அந்தக் கரைக்குப் போன உடனே திருமணம் செய்து வைக்கிறேன்.! சரி! திருமணம் ஆன உடனே, மனதினால் நினைத்து, சத்புத்ரன் பகவான் அம்சமாக உதித்தான்.



'வியாசம் வஸிஷ்ட நப்தாரம் சக்தே பௌத்ர மகல்மஷம்

பராசராத்மஜம் வந்தே சுக தாதம் தபோநிதிம்

வ்யாசாய விஷ்ணு ரூபாய வியாசரூபாய விஷ்ணவே'.

எல்லா மந்திரங்களுக்கும் அதிபதி. பராசரர் சுவாமி கிட்ட போய்விடுகிறார். சிரஞ்சீவி 535 சூத்ரங்கள். 'நன்னாரி பூட்டிய சூத்திரப்பாவை தன்னால் ஆடிக் கழித்திடுமோ' மாணிக்க வாசகர்.

இவ்வளவு கிரந்தங்களைச் செய்தவர். வணங்குகிறோம்.

இன்று உதயமானார் குரு பூர்ணிமா மூலகுரு. எல்லா சித்தரையும் தொழலாம்.

குரு இப்போது இருக்கின்ற குரு.

பராபரகுரு குருவின் குரு.

பரமேஷ்டி குரு நாராயணன்.

வழிகாட்டுவார்! சொல்லிக் கொடுத்ததைப் பின்பற்றுகிறேன் என்று சொல்லி அமைகிறேன். ஓம்.

(25.07.2010 ஞாயிறு குருபூர்ணிமா அருளுரையிலிருந்து)

– ஞானச்சேரி ஞானிகள் –
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

## சீடன் கேள்வி ஞானி பதில்

**சீடன்:** கடவுளை கும்பிடுகிறவர்கள் பக்தர்களல்ல. கடவுளுடன் உறவு வைத்துக் கொள்பவனே பக்தன் என்கிறீர்கள். இது ஏன் எல்லோருக்கும் வருவதில்லை?

**ஞானி:** உணர்ச்சிக்கு உணவு கடவுள் எனக் கொள்ளாமல், காமம் குரோதம் எனக் கொள்வதால்! குருவின் சொற்களை சரியாக கேட்க மனம் வராததால்.

**சீடன்:** குருவின் சொல்படி நடந்தால்?

**ஞானி:** பஞ்சேந்திரியங்கள் ஒருமுகப்படும். அப்பொழுது தான் கடவுளிடம் ஒருமுகப்படுத்த தோன்றும்.

**சீடன்:** சராசரி மனிதன் கடவுளை ஏன் மறக்கக்கூடாது?

**ஞானி:** மரணத்தின் காரணம் அவனுக்குத் தெரியவில்லை. பிறவியின் காரணம் தெரிய வேண்டும் என்பதால் கடவுளை எண்ண வேண்டும். மரணத்தின் அர்த்தம் தெரியவும் கடவுளை எண்ண வேண்டும்.

**சீடன்:** இதற்கு முதல் படி என்ன?

**ஞானி:** மனதிற்குள்ளே துலீசு பட்டுக் கொண்டே இருப்பதால் மனக்கண் மூடி விடுகிறது. அதனால் மனதிற்கு கடவுள் உணர்ச்சி ஏற்படுத்தினால் தான் பக்தி வெளிவரும்.

**சீடன்:** பிரும்மச்சாரியின் விளக்கம் என்ன?

**ஞானி:** 'பூலோகத்தில் சந்தோஷம் இருக்கிறது' என்று எண்ணுபவன் பிரும்மசாரி இல்லை. 'பிரும்மத்தில் தான் சந்தோஷம் இருக்கிறது' என்று எண்ணுபவனே பிரும்மச்சாரி.

**சீடன்:** 'சிறப்பான பூஜைகள்' விளக்கம் சுவாமி?

**ஞானி:** மனிதன் பூஜையின் தன்மையை மனதினால் புரிந்து கொண்டால் பூஜைகள் தானாகச் சிறப்பிக்கப்படும்.

**சீடன்:** இறைவனுக்கு எது சரி, எது தவறு, எதை செய்ய வேண்டும், எதை செய்யகூடாது?

**ஞானி:** இறைவன் எது சரி, எது தவறு, எதை செய்ய வேண்டும் , எதை செய்யக்கூடாது என்ற பட்டியல் போடுவதில்லை. போட்டால் உன்னை வழி நடத்த, சரி பார்க்க, உன்னிடமே அல்லவா இருக்க வேண்டும்?

# மித்ரவருண சக்தி எனும் மின்சாரம்

9000 ஆண்டுகளுக்கு முன்பே மின்சாரத்தை கண்டுபிடித்த 'அகத்தியர்' இதுகுறித்து ஆதாரத்துடன் கூடிய உண்மை.

நாம் இன்று பயன்படுத்தும் மின்சாரத்தை வெள்ளைக் காரன் தான் முதலில் கண்டுபிடித்தான் என்று பலரும் நினைத்துக்கொண்டிருக்கிறோம் ஆனால் அது உண்மை அல்ல.



நமது "சித்தர் பெருமக்கள்" பலர் அந்தக்காலத்திலேயே அறிவியல் துறையில் பல சாதனைகள் புரிந்தவர்கள் என்பது நாம் அறிந்ததே.

இரும்பை தங்கமாக்குவது,

கிரகங்கள் மொத்தம் 9 என அறிந்தது

இப்படி பல சான்றுகளை இதற்க்கு கூறலாம்.

அந்த வகையில் சுமார் 9000 ஆண்டுகளுக்கு முன்னரே மின்சாரத்தை கண்டறிந்தார் அகத்தியர் சித்தர்.

அதற்கான ஆதாரத்தை பார்ப்போம் வாருங்கள்.

புனேவில் தமது பொறியியல் படிப்பை முடித்த திரு கிருஷ்ணாஜி (Rao Saheb Krishnaji Vajhe) என்பவர் தனது துறை சார்ந்த ஆய்வை மேற் கொள்ள விரும்பினார்.

இதற்காக அவர் ஜோஷி (Damodar Tryambak Joshi) என்பவற்றின் உதவியை நாடினார்.

அவரிடம் பழமையான ஆவணம் ஒன்றை பெற்றுக் கொண்டு அதில் உள்ள கருத்தை ஆய்வு செய்தார்.

அந்த ஆவணம் தான் அகத்திய சம்கிதம் என்ற அறிவியல் பொக்கிடத்தின் ஒரு பகுதி.

அதில் இருந்த வரிகள் இதோ:

"சன்ஸ்தப்ய ம்ரின்மாய பத்ரே
தாம்ரப்பத்ரம் சுசான்ஸ்க்ரிதம்
சாட்யெச்சிகிக்ரிவன் சர்த்ரார்ப்ஹி
கஷ்த்பம்சுப்ஹி
தஸ்தலொஷ்தோ நிததவ்யாஹ்
பர்தச்சடிதஸ்த்ஹா
சன்யோகஜ்ய்தே தேஜோ
மித்ரவருனசங்கியதம்"




இதற்கான விளக்கத்தை இறுதியில் பார்ப்போம்.

ஆவணத்தில் உள்ளவை சம்ஸ்கிருத எழுத்துக்கள் என்பதால் சமஸ்கிருத வல்லுனரான புத்தே (Dr.M.C.Sahastra buddhe) அவர்களை அணுகினார் கிருஷ்ணாஜி.

அதை படித்த புத்தேவிற்கு ஆச்சர்யம்.

மிகப்பெரிய அறிவியல் சார்ந்த கருத்துக்கள் அதில் இருப்பதை அவர் அறிந்தார்.

உடனே அவர் அதை பொறியியல் வல்லுனர் ஹோரல் என்பவரிடம் கொடுத்து மேலும் ஆராய சொன்னார்.

கிருஷ்ணாஜியும் ஹோலும் சேர்ந்து அந்த ஆய்வை மேற்கொண்டனர்.

சம்ஸ்கிருத சொற்களில் இருந்தபடியே அவர்கள் ஒரு மின்கலத்தை வடிவமைக்கும் முயற்சியில் இறங்கினர்.

அப்போது அவர்கள் "சிகிக்ரிவம்" என்ற சொல்லுக்கு அர்த்தம் தெரியாமல் திணறினர்.

அப்போது ஒரு சம்ஸ்கிருத அகராதியில் அதற்கான அர்த்தம் "மயிலின் கழுத்து" என்றிருந்தது.

உடனே அவர்கள் மயில்கள் சரணாலயத்திற்கு சென்று அங்கு இருந்த தலைமை பொறுப்பாளரிடம் இது குறித்து விசாரித்தனர்.

அப்போது அவர் அந்த சொல்லிற்கான அர்த்தம் மயில் கழுத்து அல்ல, மயில் கழுத்தை போன்ற நிறமுடைய பொருள் என்றார்.

ஆய்வாளர்கள் இருவரும் அது குறித்து சிந்திக்கையில் 'காப்பர் சல்ஃபேட்'தான் மயிலின் கழுத்தை ஒத்த நிறம் கொண்டதாக இருக்கும் என்று கண்டறிந்தனர்.

மின் கலத்தை வடிவமைக்கும் பணியை மீண்டும் அவர்கள் தொடங்கினர்.

சில மணி நேரங்களில் மின்கலம் தயாரானது.

ஒரு மல்டி மீட்டரை கொண்டு அதை ஆராய்கையில் 1.38 open Circuit வோல்ட்டேஜ் மற்றும்

23 milliampere Short Circuit கரன்ட்டும் அதில் இருந்து கிடைக்கப்பெற்றது.

அவர்கள் வியந்து போனார்கள். அந்த காலத்தில் இதற்கு அகத்திய மாமுனி இட்ட பெயர் மித்ரவருண சக்தி.

இதைத்தான் வெள்ளைக்காரன் தான் கண்டுபிடித்ததாக கூறி அதற்க்கு கரண்ட் என்று பெயர் வைத்துள்ளான்.

நாமும் அதற்கு மின்சாரம் என்று தமிழில் பெயர் வைத்து அழைக்கிறோம்.

சம்ஸ்கிருத பாடலுக்கான பொருள்:

ஒரு மண் குடுவைக்குள்
தாமிர தகட்டை செலுத்தி
பின் சிறிதளவு
சிகிக்ரிவம்
நிறப்ப வேண்டும்.
அதன் பிறகு
ஈரமான மரத்தூள்,
பாதரசம்
மற்றும்
துத்தநாகத்தைக் கொண்டு
அதை பூச வேண்டும்.
அதன் பிறகு
இரண்டு கம்பிகளை இணைத்தால்
'மித்ரவருனசக்தியைப்' பெறலாம்.

– ஓம் ஸ்ரீ அகத்திஸ்வராய நமஹ



சிகிக்ரிவம்
'காப்பர் சல்ஃபேட்'


ஆன்மிகமலர் மெயில் புக்



சந்தான கோபால கிருஷ்ணர்



பாலகிருஷ்ணன்



காளிய கிருஷ்ணன்



கோவர்த்தனதாரி

# ஓர் அவதாரம் எட்டு பெயர்கள்



ராதாகிருஷ்ணன்(வேணுகோபாலன்)



முரளீதரன்



மதன கோபால்



பார்த்தசாரதி

கிருஷ்ண அவதாரம் ஒன்றாக இருந் தாலும், இந்த ஒரு அவதாரத்தில் எட்டுவகையான கிருஷ்ணர்கள் அடங்கி யுள்ளனர், ஆனால் பார்ப்பதற்கு மயிலிறகும், புல்லாங்குழலுடன் காட்சிதரும் அனைத்து வடிவங்களையும் கிருஷ் ணர் என்ற ஒரே பெயரில் கூறுகிறோம்.

எந்த கோலத்தில் உள்ள கிருஷ்ணருக்கு என்ன பெயர் வைத்து கூப்பிடலாம் என்பதை நமது ஆன்மிகமலர்.காம் விரிவாக படத்துடன் கொடுத் துள்ளது. தெரியாத கிருஷ்ண பக்தர்களுக்கு தெரியப் படுத்துங்கள்.

1. சந்தான கோபால கிருஷ்ணர்: யசோதையின் மடியிலே அமர்ந்த கோலம்.
2. பாலகிருஷ்ணன்: தவழும் கோலம். பலரின் பூஜை அறையில் இப்படத்தையே காணலாம்.
3. காளிய கிருஷ்ணன்:காளிங்க மர்த்தனம் புரியும் கிருஷ்ணன்.
4. கோவர்த்தனதாரி:கிருஷ்ணன் தன் சுண்டு விரலால் கோவர்த்தன கிரியைத் தூக்கும் கோலம்.
5. ராதாகிருஷ்ணன்(வேணுகோபாலன்): வலது காலை சிறிது மடித்து இடது காலின் முன்பு வைத்து பக்கத்தில் ராதை நின்றிருக்க குழலூதும் கண்ணன்.
6. முரளீதரன்: இதில் கிருஷ்ணன் நான்கு கைகளுடன், ருக்மணி மற்றும் சத்யபாமா சமேதனாய் நின்றிருக்கும் திருக்கோலம். தென் இந்தியாவில் மிகவும் புகழ்பெற்றது.
7. மதன கோபால்: அஷ்ட புஜங்களை உடைய குழலூதும் முரளீதரன்.
8. பார்த்தசாரதி: அர்ஜூனனுக்கு கீதை உபதேசிக்கும் திருக்கோலம்.


ஆன்மிகமலர் மெயில் புக்

# ராமன் வம்சம்



பிரம்மாவின் மகன்
மரீசீ
மரீசீயின் மகன்
கஷ்யபர்
கஷ்யபரின் மகன்
விவஸ்வான்
விவஸ்வானின் மகன்
மனு
மனுவின் மகன்
இஷ்வாகு
இஷ்வாகுவின் மகன்
விகுக்ஷி
விகுக்ஷியின் மகன்
புரண்ஜயா
புரண்ஜயாவின் மகன்
அணரன்யா
அணரன்யாவின் மகன்
ப்ருது
ப்ருதுவின் மகன்
விஷ்வாகஷா
விஷ்வாகஷாவின் மகன்
ஆர்தரா
ஆர்தராவின் மகன்
யுவான்ஷ்வா1
யுவான்ஷ்வாவின் மகன்
ஷ்ரவஷ்ட்
ஷ்ரவஷ்டின் மகன்
வ்ரதஷ்வா
வ்ரதஷ்வாவின் மகன்
குவலஷ்வா
குவலஷ்வாவின் மகன்
த்ருதஷ்வா
த்ருதஷ்வாவின் மகன்
ப்ரோமத்

ப்ரோமத்தின் மகன்
ஹர்யஷ்வா
ஹர்யஷ்வாவின் மகன்
நிகும்ப்
நிகும்பின் மகன்
சன்டஷ்வா
சன்டஷ்வாவின் மகன்
க்ருஷஸ்வா
க்ருஷஸ்வாவின் மகன்
ப்ரஸன்ஜீத்
ப்ரஸன்ஜீத்தின் மகன்
யுவான்ஷ்வா2
யுவான்ஷ்வாவின் மகன்
மன்தாத்தா
மன்தாத்தாவின் மகன்
அம்பரீஷா
அம்பரீஷாவின் மகன்
ஹரிதா
ஹரிதாவின் மகன்
த்ரதஸ்யு
த்ரதஸ்யுவின் மகன்
ஷம்பூத்
ஷம்பூத்தின் மகன்
அனரண்யா2
அனரண்யாவின் மகன்
த்ரஷஸ்தஸ்வா
த்ரஷஸ்தஸ்வாவின் மகன்
ஹர்யஷ்வா 2
ஹர்யஷ்வாவின் மகன்
வஸுமான்
வஸுமாவின் மகன்
த்ரிதன்வா
த்ரிதன்வாவின் மகன்
த்ரிஅருணா

த்ரிஅருணாவின் மகன்
திரிசங்கு
திரிசங்கு வின் மகன்
ஹரிசந்திரன்
ஹரிசந்திரநின் மகன்
ரோஹிதாஷ்வா
ரோஹிதாஷ்வாவின் மகன்
ஹரித்
ஹரித்தின் மகன்
சன்சு
சன்சுவின் மகன்
விஜய்
விஜயின் மகன்
ருருக்
ருருக்கின் மகன்
வ்ருகா
வ்ருகாவின் மகன்
பாஹு
பாஹுவின் மகன்
சாஹாரா
சாஹாராவின் மகன்
அசமஞ்சன்
அசமஞ்சனின் மகன்
அன்ஷுமன்
அன்ஷுமனின் மகன்
திலீபன்
திலீபனின் மகன்
பகீரதன்
பகீரதனின் மகன்
ஷ்ருத்
ஷ்ருத்தின் மகன்
நபக்
நபக்கின் மகன்
அம்பரீஷ்

அம்பரீஷனின் மகன்
சிந்து த்வீப்
சிந்து த்வீப்பின் மகன்
ப்ரதயு
ப்ரதயுவின் மகன்
ஸ்ருது பர்ணா
ஸ்ருது பர்ணாவின் மகன்
சர்வகாமா
சர்வகாமாவின் மகன்
ஸுதஸ்
ஸுதஸின் மகன்
மித்ரஷா
மித்ராஷாவின் மகன்
சர்வகாமா 2
சர்வகாமாவின் மகன்
அனன்ரண்யா 3
அனன்ரண்யாவின் மகன்
நிக்னா
நிக்னாவின் மகன்
ரகு
ரகுவின் மகன்
துலிது:
துலிதுவின் மகன்
கட்வாங் திலீபன்
கட்வாங் திலீபனின் மகன்
ரகு 2
ரகுவின் மகன்
அஜன்
அஜனின் மகன்
தசரதன்
தசரதனின் மகன்
ஸ்ரீ ரகு ராமன்







# பாதிப் பணியில் நிற்கும் சிவன் கோவில் உதவி கேட்கும் கிராம மக்கள்



விழுப்புறம் மாவட்டம் திண்டிவணம் வட்டத்தில், அத்திப்பாக்கம் கிராமத்தில் எழுந் தருளியிருக்கும் அருள்மிகு. ஸ்ரீ அமிர்த ஈஸ்வரர் சமேத ஸ்ரீ அமிர்தசுந்தரி திருக்கோயில் 1500 ஆண்டுகள் பழமை வாய்ந்தது.

இத்திருக்கோயிலை பல்லவ மன்னன் மகேந் திரவர்மன் காலத்தில் கட்டப்பட்டது. என்று வரலாற்று குறிப்புகளின் மூலம் அறியப்படுகிறது.

இந்த திருக்கோயிலின் தலவிருட்சத்தின் பழமை மாறாத நிலையில் மிகவும் நேர்த்தியாக அழகாக உள்ளது.

இவ்வளவு பழமை வாய்ந்த இத்திருக்கோயிலை பராமரிக்காமல் பல தலைமுறைகள் அப்படியே விட்டுவிட்டதால் பாழடைந்து சிதிலமடையும் நிலைக்கு தள்ளப்பட்டதை அறிந்த ஊர் மக்கள் மிகுந்த சிரத்தையுடன் தங்களால் ஆன உதவி செய்து, வி.பூபாலகிருஷ்ணன் என்பவரின் தலைமையில் இத்திருக்கோயிலை புதுப்பிக்கத் துவங்கியுள்ளனர்.

பல்வேறு கட்டப்பணிகள் முடிவடைந்த நிலையில் தற்போது சுற்றுச் சுவர் கட்டுவது போன்ற ஒருசில பணிகள் மட்டுமே எஞ்சியுள்ள நிலையில், போதிய நிதி இல்லாத காரணத்தால் இத்திருக்கோயிலின் பணி முழுவதும் பூர்த்தியடையாமல் தடைபட்டுள்ளது.

துவக்கப்பட்ட இறைபணி முழுமையடையாத தால் கிராம மக்கள் மிகுந்த வருத்தமடைந்துள் ளனர்.

ஒருசில சிவபக்தர்கள் தங்களால் ஆன உதவிகளை செய்தாலும், தேவை பூர்த்தி யாகாமல் சிவபெருமான் சன்னதியில் அமர முடியாமல், அருகில் ஒரு ஓலைக் குடிசையில் வைக்கப்பட்டுள்ளார்.

பழமை வாய்ந்த சிவபெருமானுக்கு புனரமைத்து கட்டப்பட்டுள்ள புதிய திருக்கோயிலில், வைத்து கும்பாபிஷேகம் செய்ய அன்பர்கள் முடிந்த உதவிகளை நேரியாகவோ, தொலைபேசி வாயி லாகவோ செய்தால் ஸ்ரீஅமிர்த ஈஸ்வரர் சமேத ஸ்ரீ அமிர்தசுந்தரி தாயாரின் அருளைப் பெறலாம்.

விருப்பமுள்ள அன்பர்கள் தொடர்பு கொள்ளவும்:

வி.பூபாலகிருஷ்ணன்,
அத்திப்பாக்கம் கிராமம்,
செல்: +91 09952603036






ஆன்மிகமலர் மெயில் புக்

# குங்குமம்



நம் பாரத கலாச்சாரத்தில் முக்கிய அங்கம் வகிப்பது குங்குமம். இயற்கையாக மஞ்சள் கிழங்கிலிருந்து தயாரிக்கப்படுவதே குங்குமம் ஆகும். அதில்பூமி தத்துவம் அதிகம் உள்ளது. ஆனால் இன்றோ இயற்கையான குங்குமத்தின் இடத்தை செயற்கையான ஸ்டிக்கர் பொட்டு பிடித்துள்ளது.

விலை உயர்ந்த கற்கள், மணிகள் பதித்த பல வகையான ஸ்டிக்கர் பொட்டுக்கள் இப்பொழுது கிடைகின்றன. அதற்கும் ஒருபடி மேலே போய் மேற்கத்தியகலாச்சார போகத்தால் நெற்றியில் பொட்டு வைப்பதேஅரிதாகி விட்டது.

குங்குமம் இடுவதன் சூட்சும பலன்

குங்குமம் சாத்வீகமானதால், தெய்வீக, தத்துவத்தை ஆகர்ஷிக்கிறது. வட்ட சுழற்சி வடிவில் இந்ததெய்வீக தத்துவம் வெளிப் படுகிறது. குங்குமம், சைதன்ய ப்ரவாஹத்தை ஆகர்ஷிக்கிறது.

பின்புவட்டசுழற்சி வடிவில் அதை வெளியிடுகிறது. குங்குமம் அணிந்திருக்கும் பெண்ணின்உடலில் சைதன்யம் பரவி அங்கு சேர்ந்துள்ளகருப்பு சக்தியை அழிக்கிறது.

அவளைச்சுற்றி ஒரு சைதன்ய கவசம்ஏற்பட்டு அதனால் அவளது உடலும், மனமும்தூய்மையடைகிறது.



## குங்குமத்தால்ஏற்படும் அதிர்வலைகள்சதவிகிதம்

| | |
|---|---|
| சக்தி | 3% |
| சைதன்யம் | 2% |
| தெய்வீகதத்துவம் | 2% |

## குங்குமத்தால்ஏற்படும்நன்மை

1. குங்குமம் இடும்போது நெற்றியின் மத்தியில் ஆக்ஞாசக்கரத்தில் அழுத்தம் ஏற்படுகிறது. அதனால், முகதசைகளுக்கு ரத்த ஓட்டம் கிடைக்கிறது.
2. குங்குமம்அணிவதால், சக்தி தத்துவத்தை ஈர்க்கும் ஆற்றல் ஒரு பெண்ணுக்கு ஏற்படுகின்றது.
3. குங்குமம் அணிவதால் ஒரு பெண்ணின் ஆன்மீக உணர்வு விழிப்படைகிறது.
4. இந்த ஆத்மசக்தியால், சக்தி தத்துவத்தின் காக்கும் மற்றும் அழிக்கும் அதிர்வலைகளை ஆகர்ஷிக்கும் சக்தி ஏற்படுகின்றது.
5. ஒருபெண்ணுக்குள் இருக்கும் காக்கும் சக்தி தத்துவ அதிர்வலைகள் விழிப்படைகின்றன. அதனால் சுற்றுப் புறச் சூழலில் உள்ள சக்தி தத்துவத்தின் சூட்சும துகள்கள் அப்பெண்ணால் ஆகர்ஷிக்கப்படுகின்றன.
6. குங்குமத்தால், தீயசக்திகள், ஆக்ஞா சக்கரத்தின் மூலம்பெண்ணின் உடலுள் நுழைய முடியாமல் தடுக்கப்படுகின்றன.

## திருமணமானபெண் நெற்றி வகிட்டில் குங்குமம்/ சிந்தூரம்வைப்பதன் பலன்

1. முற்காலத்தில், திருமணமான பெண்ணின் வகிட்டில் உள்ள குங்கும / சிந்தூரத்தைப் பார்க்கும் பொழுது, ஆணின் வீர உணர்ச்சியும், உற்சாகமும் அதிகமாயின. இக் காரணத்தால் மனோரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் இவ்வழக்கம் ஏற்பட்டது.
2. இப்பகுதியைதீய சக்திகளின் தாக்குதலிலிருந்து பாதுகாக்க, அங்கு சிந்தூரம் வைக்கப்பட்டது. ஆன்மீக சாஸ்திரம் என்னவென்றால், குங்குமத்திலுள்ள மாரக சக்தியால் (அழிக்கும்சக்தியால்) பெண்ணின் சூட்சும தேகம் தீய சக்திகளிடமிருந்து பாதுகாக்கப்படுகிறது. குங்குமத்தைக் காட்டிலும் சிந்தூரத்தில் இந்த அழிக்கும் சக்தி குறைவாகவே உள்ளது. அதனால் சிந்தூரத்தைக் காட்டிலும் குங்குமமே அதிக பலனை அளிக்கவல்லது.

தகவல் : ஹிந்து ஜனஜாக்ருதி ஸமிதி,
தொடர்பு : 9380949626

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

# சளித்தொல்லை இல்லாமல் வாழுகிற மனிதன்தான் நிஜமான ஐஸ்வர்யமானவன்

## சித்தர்கள் சரீர போஷாக்கை பற்றி அதிகமாக பேசியதன் காரணம்

சுவர் இருந்தால் தான் சித்திரம் எழுத முடியும் என்பார்கள். உடல் என்ற ஒன்று இருந்தால் தான் அதில் ஆத்மா வாசம் செய்ய முடியும். குடியிருக்கின்ற வீடு ஒழுகிக்கொண்டே இருந்தால் அதில் வசிப்பவன் நிம்மதியாக வாழ முடியுமா? தனது அன்றாட வேலைகளை தங்கு தடையின்றி செய்ய முடியுமா? நிச்சயம் இயலாது. இயல்பான வாழ்க்கையை நடத்துவதற்கு வீடு எப்படி அவசியமோ? அதே போல ஆத்மா இறைவனது திருவடியை நிரந்தரமாக சென்றடைய சரீரம் என்பது அவசியமானது. அதனால் தான் சித்தர்கள் சரீர போஷாக்கை பற்றி அதிகமாக பேசினார்கள் என்பதை மனதில் வைக்க வேண்டும்.



காயசுத்தியில் முதலாவதாக வருவது தந்த சுத்தி என்ற பற்களின் பராமரிப்பு. சொத்தையாகி போனால் பிடுங்கி எறியக்கூடிய பற்களுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமா என்று சிலர் யோசிக்கலாம். ஒரு மனிதனது உடலில் பெருவாரியான நேரம் அதிகமாக வேலை செய்வது வயிறு தான் வயிற்றின் வேலையை குறைப்பதற்கு உதவி செய்வது பற்கள் மட்டுமே என்பதை மறக்க கூடாது. உணவை மென்று அரைத்து கூழாக்கி ஜீரணம் ஆவதற்கான மெல்லிய பொருளாக கொடுப்பது பற்களின் வேலை. உட்கொள்ளும் உணவை துண்டு துண்டாக அப்படியே குடலிடம் கொடுத்தால் அது செரிமானம் செய்வதற்கு வெகு நேரமாகி விடும் பல பொருட்கள் செரிமானம் ஆகாமல் வயிற்றிலேயே தங்கி விடும். ஒரே இடத்தில் குப்பை தேங்கி கிடந்தால் விஷ வாயு உற்பத்தி ஆவது போல் வயிற்றிலே கழிவு பொருட்கள் அதிகமாக தங்கினால் இரத்தம் கெட்டுவிடுகிறது. வராத நோயெல்லாம் தானே வர துவங்கி விடுகிறது.

எனவே சித்தர்கள் வேப்பம் பட்டை, கருவேலம் பட்டை, ஆலம்விழுது பட்டை அல்லது நாயுருவி, கடுக்காய்பொடி இவைகளில் ஏதாவது ஒன்றை தேர்ந்தெடுத்து தூளாக்கி கிராம்பு மற்றும் இந்துப்பில் கலந்து பல்விளக்கும் பழக்கத்தை உருவாக்க வேண்டும் என்கிறார்கள். காலை, மாலை இரண்டு வேளையிலும் பல் துலக்குவது அவசியம் என்பது சித்தர்களின் நெறியாகும். மிக குறிப்பாக நான் மேலே குறிப்பிட்ட ஐந்து பொருட்களையும் ஒன்றாக கலந்து பொடி செய்து கொண்டால் அதற்கு "பஞ்சமூல லவணம்" என்று பெயர். இதை வைத்து வாயை சுத்தப்படுத்தி வந்தால் ஈறுகளும், பற்களும் வலுப்படுவதோடு வாய்துர்நாற்றம், பல் அசைவு, பல்லில் உள்ள கறைகள் கிருமித்தொற்று போன்றவைகள் விலகி முக வசீகரம் ஏற்படும் என்கிறார்கள்.

அடுத்ததாக சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், ஜாதிபத்திரி, லவங்கபத்திரி, தாலிசபத்திரி, வெள்ளை மிளகு, வால்மிளகு, சீரகம், கருஞ்சீரகம், சந்தனம்,தேவதாரு கட்டை, விளாமிச்சைவேர், வெட்டி வேர், நன்னாரி வேர், வெந்தயம் ஆகிய பொருட்களை இடித்து வைத்துக்கொண்டு துரிசம், பவளபுத்து, சாம்பிராணி, பச்சை கற்பூரம் போன்றவற்றை தனித்தனியாக பொடி செய்து, கரிசலாங்கண்ணி கீரையை சாறு எடுத்து அவற்றோடு மேற்குறிப்பிட்ட பொருள்களை கலந்து தேங்காய் எண்ணெய் சேர்த்து மெல்லிய நெருப்பில் கொதிக்க வைத்து பத்திரப்படுத்தி கொள்ள வேண்டும். தினசரி காலையில் எழுந்தவுடன் உச்சந்தலை பிடரி போன்ற பகுதிகளில் சற்று அழுத்தி தேய்த்து அரைமணிநேரம் சென்ற பிறகு குளிக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். இந்த எண்ணெயை தேய்ப்பதனால் சூடு, கண் எரிச்சல், பிடரி வலி, தலைவலி போன்றவைகள் நீங்கி மூளை தெளிவடையும் என்பதை உணர வேண்டும்.

பிறந்தவர்கள் அனைவரும் இறக்க வேண்டும் என்பது



www.aanmeegamalar.com




விதி. மரணத்திலிருந்து யாரும் தப்ப முடியாது. மரணத்திற்கு பல காரண காரியங்கள் இருக்கிறது. ஆனால் பொதுவாக பெருவாரியான உயிர்கள் உடலை விட்டு பிரிந்து போவதற்கு எது காரணமாக இருக்கிறது என்பதை பற்றி நம்மில் பலர் சிந்திப்பது கிடையாது. ஆற்றில், குளத்தில் விழுந்து சாகிறவன் விபத்துகளில் இறந்து போகிறவர்கள், படுகொலை செய்யப்படுபவர்கள் இவர்களுடைய உயிர் எதனால் பிரிகிறது என்பது ஓரளவு நமக்கு தெரியும். ஆனால் நோய்பட்டு இறப்பவர்களுடைய உயிர் எதனால் போகிறது என்று கேட்டால் அதற்கு ஒரே பதில் கபம் என்ற சளியால் போகிறது என்று மட்டும் தான் கூறமுடியும். ஒருவருக்கு இதய நோய் வரலாம், புற்றுநோய் வரலாம் வேறு எந்தவிதமான நோய்களும் வரலாம். இந்த நோய்களின் இறுதி வடிவம் அதாவது உயிரை பறிக்கும் நிலை கப வடிவம் என்று தான் கூறவேண்டும்.

அதனால் தான் சித்தர்கள் நுரையீரலில் உருவாகும் கோழையை யமன் என்ற பெயரில் அழைத்தார்கள். உடம்பில் சளியானது சேர சேர உடல் இயக்கம் குறைகிறது. இரத்த ஓட்டம் தடைபடுகிறது. எலும்புகள் வலுவிழக்கிறது. நாடி நரம்புகள் எல்லாம் தளர்ந்து போய் நடமாடும் பிணமாக மனிதன் ஆகிவிடுகிறான்.

எனவே சளித்தொல்லை இல்லாமல் வாழுகிற மனிதன் தான் நிஜமான ஐஸ்வர்யவனாவான் எனலாம். இந்த சளித்தொல்லையை முற்றிலுமாக நீக்குவதற்கு சித்தர்கள் கபசுத்தி என்ற பெயர் கொடுத்து கரிசாலை நெய் என்ற அற்புதமான மருந்தையும் கூறி இருக்கிறார்கள். கரிசாலை நெய்யை பற்றி பேசாத சித்தர்களே இல்லை என்று சொல்லலாம். சித்தர்களின் மருத்துவ முறையில் மணிமகுடமாக இருப்பது கரிசாலை நெய் என்றால் அது மிகையில்லை.

இந்த நெய்யை சற்று முயற்சி செய்தால் யார் வேண்டுமானாலும் செய்யலாம். கரிசலாங்கண்ணி கீரையை வேரோடு பிடுங்கி வந்து நன்றாக கழுவி அம்மியில் வைத்து அரைக்க வேண்டும். இந்த இடத்தில் கவனிக்க வேண்டிய பகுதி கீரையை அம்மியில் அரைக்க வேண்டுமே தவிர நமது சவுகரியத்திற்காக மிக்ஸியில் போட்டு அரைக்ககூடாது. கையின் வேகத்திற்கு கல் சுழன்று வந்து அரைத்தால் அரைபடும் பொருளின் இயற்கை தன்மை கெடுவதில்லை.

**கையின் வேகத்திற்கு கல் சுழன்று வந்து அரைத்தால் அரைபடும் பொருளின் இயற்கை தன்மை கெடுவதில்லை. மின்சார இயந்திரத்தின் அதீத வேகத்தில் அரைபடும் பொருளின் ஜீவன் போய்விடுகிறது.**

மின்சார இயந்திரத்தின் அதீத வேகத்தில் அரைபடும் பொருளின் ஜீவன் போய்விடுகிறது. சக்கை மட்டுமே மிஞ்சுகிறது. இதற்கு உதாரணமாக சொல்வது என்றால், கையால் அரைக்கும் தேங்காய் சட்டினி சுவையும், மிக்ஸியில் அரைக்கும் சட்டினியின் சுவையும் ஒப்பிட்டாலே போதுமானது.

அரைக்கப்பட்ட கீரை விழுதை உருண்டையாக பிடித்தால் ஒரு தேங்காய் அளவு வரவேண்டும். அதாவது அந்த அளவிற்கு கீரை தேவை இந்த விழுதை சுத்தமான பசுநெய்யில் போட்டு கலக்கி ஐந்துகிராம் அளவிற்கு சீனி காரத்தை போட்டு விறகு அடுப்பில் ஏற்றி மிதமான நெருப்பில் மெழுகு பதமாக காய்ச்சி வடிகட்டி பத்திரபடுத்தி கொள்ள வேண்டும். இந்த மெழுகை சூரியன் உதிக்கும் முன் எழுந்து வலது கை பெருவிரலால் தொட்டு வாயை நன்றாக திறந்து உள்நாக்கில் பின்புறம் உள்ள மேல்நோக்கி அமைந்த துவாரத்தில் தடவி அரைமணிநேரம் காத்திருக்க வேண்டும். இந்த நேரத்தில் ஊர்த்துவ நாடி, சுழுமுனை நாடி என்றெல்லாம் சித்தர்களால் சொல்லப்படும் சூட்சம நாடிக்குள் அடங்கி கிடக்கும் கோழை நூல் நூலாக வெளியே வந்து விழும். இப்படி நாற்பத்தி எட்டு நாட்கள் தொடர்ந்து செய்தால் உடம்பில் உள்ள தேவையற்ற சளி வெளியேறி, ஆரோக்கியமான நுரையீரல் உடல் முழுவதும் நல்ல பிராணக்காற்றை தரும். இந்த முறையை மூன்று வருடத்திற்கு ஒருமுறை செய்து வரவேண்டும். இத்தோடு ஆறுமாதத்திற்கு ஒருமுறை பதிக்கு மருந்து உண்டு குடலை சுத்தப்படுத்தி கொள்ள வேண்டும்.

இவைகள் தான் தினசரி நமது உடம்பை பராமரிக்க சித்தர்கள் கூறிய நித்திய சுத்தி என்ற காயசித்தி முறையாகும். இது தவிர குளிர்ந்த நீரில் மட்டுமே குளிப்பது, இரசாயன பொருட்களை உடல் அழுக்கை நீக்க பயன்படுத்தாமல் இருப்பது, மசாலா பொருட்களை தவிர்த்து கீரைகள், காய்கறிகள் போன்றவற்றை உண்பது, மாமிச போஜனத்தை எந்த நிலையிலும் ஏற்காமல் இருப்பது, போன்ற வழிவகைகளும் கூறுகிறார்கள். அவர்கள் கூறுகிற அனைத்தையும் பட்டியல் போட்டுச்சொன்னால் எதைச்செய்வது எதை விடுவது என்ற குழப்பம் வந்துவிடும் எனவே மிக முக்கியமானதை மட்டுமே இங்கே சொன்னேன். நம்மால் முடிந்தவரை இந்த முறைகளை பயன்படுத்தினால் நல்லது என்று நினைக்கிறேன்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434

ஆன்மிகம் தத்துவம் உடல்நலம் பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
பெற உங்கள் இமெயில் முகவரியை
கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி
வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்
அனைத்து புத்தகங்களையும் படித்து
மகிழவும் டவுன்லோடு செய்யவும்
aanmeegamalar.com
MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY
இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

# கெர்போட்ட நாள்



# அடுத்த வருட மழையளவை முன்னோர் கண்டறிந்த எளிய முறை

தமிழர்களின் கண்டுபிடிப்புக்கள் இன்று தமிழர்கள் அறியாமல் அடையாளம் இழந்து கொண்டு உள்ளனர்...

தினசரி காலண்டரில் "கெர்போட்ட நிவர்த்தி" என்று ஒரு குறிப்பு உள்ளது. அப்படி என்றால் என்ன? ஏதேனும் விஷேச நாளா? என்று இதுவரை நாம் கேள்வி கேட்டதே கிடையாது.

கெர்போட்ட நிவர்த்தி என்பது எந்த விசேட தினமோ அல்லது மார்கழி மாத கோவில் திருநாளோ அல்ல.

உண்மையில் தமிழர்கள் அடுத்த வருட மழை கணிப்பு முறை.

அதாவது "கரு ஓட்டம்" என்பதே கர்ப ஓட்டம் என்று மாறி கர்ப்போட்டம் என்றாகி இன்று காலண்டர்களில் கெர்ப்போட்டம் என்று காண்கிறது.

நம்முடைய தமிழகத்தில் சூரியனின் சுழற்சியை மையமாக கொண்ட சூரிய வழி மாதங்கள் பின்பற்ற படுகிறது

இது தவிர வானியல் நட்சத்திரங்களை இருபத்தேழு மண்டலங் களாகவும் பன்னிரு ராசி மண்டலங்களாகவும் பிரித்துள்ளனர்.

அவ்வகையில் தனூர் மாதம் எனப்படும் மார்கழியில் சூரியன் தனூர் ராசி மண்டலத்தை கடக்கும் போது பூராட நட்சித்திரத்தை கடக்க பதினான்கு நாட்களை எடுத்து கொள்கிறது.

இந்நாட்களில் கருமேகங்கள் தெற்கு நோக்கி நகருவதை கண்டு கொள்ளலாம்.

இந்த பதினான்கு நாட்களும் கர்ப்போட்ட நாட்கள் ஆகும்.

அதாவது

மழை கரு கொள்ளும் நாள் அல்லது மேகம் சூல் ஆகும் நாள்.

இதனை பெண்ணின் பத்து மாத கர்ப்ப காலத்துடன் ஒப்பிடுங்கள். மார்கழியில் கர்ப்பம் தரிக்கும் பெண் ஒருவள் 'ஒன்பது மாதம்' கழித்து புரட்டாசிக்கு பின் பிள்ளை பெறுவாள்.

அவ்வகையில் இந்த கர்போட்ட நாட்களில் மழை முறையாக சூல் கொண்டால், ஒன்பது மாதம் கழித்து அடுத்த ஆண்டில் ஐப்பசி கார்த்திகையில் மழை பொழிவு அளவும் முறையாக இருக்கும்.

இந்த கர்போட்ட நாட்கள் தோராயமாக டிசம்பர் 28 முதல் ஜனவரி 11ஆந் தேதி வரை அமைகிறது.

ஒரு எளிய விவசாயிக்கு தனூர் மாதம் பூராடம் நட்சத்திரம் எல்லாம் தெரியாது இல்லையா??.

எனவே மார்கழி மாதம் அமவாசையில் இருந்து அடுத்து வரும் பதினான்கு நாட்கள் "கர்போட்ட நாட்கள்" என்று நினைவில் வைத்து கொள்வார்கள்.

இந்நாட்களில் லேசான தூறல் மெல்லிய சாரல் போன்ற மழை இருந்தால் மேகம் சரியாக கரு கட்டி இருக்கிறது என்று பொருள்.

எனவே வரும் அடுத்த ஆண்டு நல்ல மழையை எதிர்பார்க்கலாம்.

மாறாக கர்ப்போட்ட நாட்களில் கன மழை பெய்து சூறைக் காற்று வீசினாலோ கடும் வெயில் இருந்தாலோ மேகத்தின் கரு கலைந்து விட்டது என்று பொருள்.

எனவே மார்கழியில் கன மழை பெய்தால் அடுத்த ஆண்டு பருவ மழை பொய்க்கும் என அர்த்தம்.

இன்றைய வாழ்க்கையின் மாறுபட்ட சூழலியல் கேடுகளும் பருவ நிலை மாற்றமும் மேகத்தின் கருக்கலைக்கும் வில்லன்களாக உருவெடுப்பதால்தான் ஒவ்வொரு வருடமும் மழையளவு குறைகிறது.

இந்த கர்போட்ட நாட்களை கணித்து இன்றும் திருநெல்வேலி பகுதிகளில் விவசாயிகள் தங்கள் நிலங்களில் மானாவாரி (வானம் பார்த்த பயிர்) பயிர்களை விதைக்கிறார்கள் விவசாயிகள்.

சூரியன் வடக்கு நோக்கி நகர்வதற்கு. முன்னால் பூமியின் அச்சு அசையாமல் இருக்கும். இதுதான் கர்ப்போட்டம் சங்க கால நூலில் உள்ளது. இந்த காலத்தில் எத்தனை மிமீ மழை எங்கே, எவ்வளவு பதிவு ஆகிறதோ. அதை ஆறு மாத நாள்களால் பெருக்க வேண்டும். உதாரணம் 5மிமீ × 180 = 900 மிமீ சராசரியாக பெய்யும். அதற்கு தகுந்தால் போல் நீர் மேலாண்மை செய்வார்கள். பயிரை தேர்வு செய்வார்கள்.

நாம் இது பற்றி எல்லாம் தெரியாமல் காலண்டரில் கர்ப்போட்டம் என்று பார்த்ததும் ஏதோ பண்டிகை என்று நினைத்து தேதியை கிழிப்பது போல நம் பாரம்பரியத்தை கிழிக்கிறோம்.

ஆங்கில கல்வியில் நம் பாரம் பரியத்தை இழந்து இன்று மழை வரும் நாட்களை தெரிந்து கொள்ள வானிலை அறிக்கைக்கு டீவியை பார்த்து கொண்டு அமர்ந்து இருக் கிறோம்.

நன்றி:
ஜி.பாலசுப்ரமணிய ஆதித்தன்

www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com

# மின்னூல் வடிவத்தில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்

அனைத்து பிரதிகளையும் படித்து மகிழ...

ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

www.aanmeegamalar.com

MAGZTER

DIGITAL MAGAZINE STORE

TAP · READ · ENJOY

இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com

இணையதளத்தின் செய்திகளை

உலகின் அனைத்து

மொழிகளிலும்

செய்திகளைத் தரும்

dailyhunt

மொபைல் அப்பில் உடனுக்குடன்

தெரிந்து கொள்ளலாம்.

www.aanmeegamalar.com